வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 05 | 11.12.2023 திங்கட்கிழமை | இதழ் : 343 | பக்கங்கள் : 12




## முள்ளிவாய்க்காலாக மாறும் காஸா!

**8.5 சதுர கி. மீ. பாதுகாப்பு வலயத்துக்குள் 20 இலட்சம் பேரை செல்லுமாறு பணிப்பு**



காஸா, டிசெ. 11

காஸா முழுவதும் இஸ்ரேல் தனது இராணுவ தாக்கு தலை அதிகரித்துள்ளது. இந்த நிலையில், தான் பிகடனப்படுத்தியுள்ள 'மனிதாபிமான மண்டலம்' எனப்படும் பாதுகாப்பு வலயத்துக்குள் சுமார் 20 இலட்சம் மக்களை செல்லுமாறு மீண்டும் அறிவித்துள்ளது.

இஸ்ரேல் அறிவித்துள்ள மனிதாபிமான 11

## சந்தோஷ் ஜா வார இறுதியில் தூதுவராகப் பொறுப்பேற்பார்



கொழும்பு, டிசெ. 11

இலங்கைக்கான இந்திய தூதுவராக மூத்த இராஜதந் திரியான சந்தோஷ் ஜா இந்த வார இறுதியில் பணியை பொறுப்பேற்கவுள்ளார்.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து இந்தியாவின் செல்வாக்கு சரிந்து வருவதாகக் கருதப்படுகின்றது. இந்த நிலையில், இந்தியா தற்போதைய தூதுவர் கோபால் பாக்லே அவுஸ்திரேலியாவுக்கான தூதுவராக பொறுப்பேற்கவுள்ளார். 11

# இலங்கை வந்த குழு பெரும்பான்மை புலம்பெயர் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை

## 6 புலம்பெயர் அமைப்புகள் கூட்டாக அறிக்கை

லண்டன், டிசெம்பர் 11

இலங்கை வந்துள்ள உலக தமிழர் பேரவையை சேர்ந்த பிரதிநிதிகள் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களில் பெரும்பான்மையினரை பிரதி நிதித்துவம் செய்யவில்லை. அத்துடன், அவர்களின் கருத்துகள் பெரும்பான்மையான புலம்பெயர் தமிழ் மக்களின் கருத்துகளையும் பிரதிபலிக்கவில்லை என்று ஆறு முக்கிய புலம்பெயர் அமைப்புகள் கூட்டு அறிக்கை மூலம் வெளிப்படுத்தியுள்ளன.

ஆறு அமைப்புகளும் ஒப்பமிட்டு வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில், 11

## புலிகளின் சின்னத்தை முச்சக்கரவண்டியில் ஒட்டியவர் கைது!

கொழும்பு, டிசெ. 11

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சின்னத்தை முச்சக்கர வண்டியில் ஒட்டியவர் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழேயே இவர் கைது செய்யப்பட்டார்.

நேற்றைய தினம் இந்தக் கைது இடம்பெற்றது. மாத் தளை - கந்தேநுவர பிரதேசத்தை சேர்ந்த வரே இவ்வாறு கைது 11

## யாழ். ரயில் சேவை 6 மாதம் தடைப்படும்

கொழும்பு, டிசெ. 11

மாஹோ சந்தி முதல் அநுராதபுரம் வரையான வடக்கு ரயில் பாதை திருத்த பணிகளுக்காக 6 மாதங்களுக்கு மூடப் படவுள்ளது என்று புகையிரத திணைக் களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, அடுத்த வருடம் ஜனவரி மாதம் 7 ஆம் திகதி முதல் எதிர்வரும் 6 மாதங்களுக்கு குறித்த தொடருந்து மார்க்கம் மூடப்படவுள்ளது.

இந்தக் காலப் பகுதியில் கொழும்பிலிருந்து மாஹோ சந்தி 11

## தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் குழிதோண்டி புதைக்கப்படும் ஆபத்தில்!

### தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 11

புதிய அரசியல்யாப்பு, மாகாண சபைக்கான அதிகாரங்களை பகிர்வதற்காக ஏற்படுத் தப்பட வேண்டும் என்று முன்வைக்கின்ற கோரிக்கை அபத்தமானதும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசையை குழிதோண்டி புதைக்கும் ஆபத்தான நடவடிக்கையும் ஆகும் - இவ்வாறு எச்சரித்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

இலங்கை வந்துள்ள உலக தமிழர் பேரவை அமைப்பினர் இமயமலை பிரகடனம் என்ற விடயத்தின் அடிப்படையில் அரச தரப்பினர் தென்னிலங்கை சமூக அமைப்புகள் மற்றும் தேரர்களை சந்தித்து வருகின்றனர். இந்த நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ரெலோவின் 11

## எனது ஆதரவாளர்கள் புறக்கணிப்பு விசாரணைகளை முன்னெடுங்கள்!

### தமிழரசு கட்சிக்கு சம்பந்தன் கடிதம்



கொழும்பு, டிசெ. 11

திருகோணமலை மாவட்டத்தின் மூலக் கிளைகள் தெரிவின்போது எனக்கு ஆதரவாக உள்ள கட்சியின் நீண்டகால அங்கத்தவர்கள் இலக்கு வைக்கப்பட்டு புறக் கணிக்கப்பட் டுள்ளனர் என்று தெரிவித்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா. சம்பந்தன் அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி ஒழுக்காற்று குழுவிடம் எழுத்து மூலமாக கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் வருடாந்த மாநாடு எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள 11

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலை கண்டு அச்சமடைகிறார்

### வவுனியாவில் சிறீதரன் எம்.பி.

வவுனியா, டிசெ. 11

தேர்தல் நடக்கும் என்று சொல்வது ஜனாதிபதிக்கு ஒரு வருத்தமாக இருக்கிறது. அவர் இவ்வாறு கூறி தனது அரசியல் இருப்பை தக்க வைத்துக்கொள்ள பார்க்கின்றார் என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கு போட்டியிடும் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வவுனியாவில் கட்சியின் பொதுக்குழு 11

## மின்னல் தாக்கியதாலேயே மின்சாரம் தடைப்பட்டது!

### மின்சார சபை விளக்கம்

கொழும்பு, டிசெ. 11

நாடு முழுவதும் நேற்று முன்தினம் திடீரென மின்சாரம் தடைப்பட்டமைக்கு கொத்மலை - பியகம மின் விநியோக கட்டமைப்பை மின்னல் தாக்கியமையே காரணம் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மின்சக்தி அமைச்சும் இலங்கை மின்சார சபையும் இரு வேறு 11

## பலாலி, மத்தள, இரத்மலானையால் 2,600 கோடி ரூபாய் வருமானம்!

### நிமால் சிறிபால டி சில்வா

கொழும்பு, டிசெ. 11

பலாலி, மத்தள, இரத்மலானை ஆகிய மூன்று விமான நிலையங்கள் மூலமாக 2 ஆயிரத்து 600 கோடி ரூபாய் இலாபம் ஈட்டப்பட்டுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சரியான வேலைத் திட்டத்தால் நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையுடன் இலங்கையின் 11

# இப்படியும் நடக்கிறது

ஒவ்வோர் அரசாங்கம் மாறும் போதும் அவர்கள் மீதான தடையும் வரும் போகும். ஆனால் அவர்கள் அதனால் மாத்திரமே பேசப்படு வார்கள்.

விடுதலைப் புலிகள் போராடிக் கொண்டிருந்த போது அதன் ஆதரவா ளர்களாக - அல்லது அவர்களுக்காக பிரச்சாரம் செய்பவர்களாக இருந்த வர்கள், அவர்கள் மௌனிக்கப்பட்ட பின்னர், தாங்களே புலம்பெயர் தமிழர்களின்தலைவர்கள் என்று தமக் குத்தாமே முடிசூட்டிக்கொண் டார்கள்.

அதனால் நீண்டகாலமாக அவர் கள் புலிகளின் கொள்கைகளை தொடர்ந்து முன்னெடுப்பவர்களாக நம்பப்பட்டதே அவர்கள் மீதான தடைக்கு முக்கிய காரணமானது.

புலம்பெயர் தமிழர்கள் பற்றியோ, அல்லது அவர்களின் செயல்பாடுகள் பற்றியோ போதிய அறிவும் புரிதலும் இல்லாத அரசாங்கமும் ஆளும் தரப்பும் அவ்வப்போது இவர்களைப் போன்றவர்களே புலம்பெயர் தமிழர் களின் பிரதிநிதிகள் என்று நம்பிக் கொண்டிருந்தனர்.

விடுதலைப் புலிகள் மௌனிக் கப்படுவதற்கு முன்னதாக புலம்பெயர் நாடுகளில் இருந்த முக்கிய அமைப்புக் களை ஒன்றிணைத்து அமைக்கப் பட்டதே உலகத் தமிழர் பேரவை. அதனை ஒழுங்கமைத்ததில் அருட் தந்தை இம்மானுவல் அடிகளாருக்கு முக்கிய பங்கு உண்டு. அவர் அதனை கொண்டு நடத்துகின்ற காலம்வரை அந்த அமைப்பு விடுதலைப் புலிக ளின் கொள்கைகளை தொடர்ந்து ஜனநாயக வழிகளில் தொடர்வதற்கு முயன்றுகொண்டிருந்ததையும் ஏற்றுக்கொண்டே ஆகவேண் டும்.

ஆனால், நாட்கள் செல்லச் செல்ல, அந்த அமைப்புக்களில் இருந்தவர்கள் ஒவ்வொருவரும் தத்தமக்கு சரி என்று பட்டதை தம் இஷ்டப்படி செய்ய முயன்றனர்.

அதனால் உலகத் தமிழர் பேரவை யில் இன்று எந்த அமைப்புமே இல்லை என்பதுதான் உண்மை. இப் போது முதலில் அதில் இடம்பெற்றி ருந்த அமைப்புகளில் இருந்தவர்களில் சிலரைக் கொண்டு அதுவே உலகத் தமிழர் பேரவையாக குறுகிவிட் டது.

இன்று உலகத் தமிழர் பேரவை யில் உதாரணமாக பிரிட்டனை பிரதிநிதித்துவப்படுத்திய பிரித்தா னிய தமிழர் பேரவையில் சுரேன் சுரேந்திரனும் அவரது புதல்வரும் குகேந்திரனுமே எஞ்சியிருக்கின்ற னர்.

அமெரிக்காவை பிரதிநிதித்து வப்படுத்தி உலகத் தமிழர் பேரவை யில் அங்கம் வகித்த அமெரிக்க தமிழர் செயல்குழுவிலிருந்து செயல்ப ட்ட கலாநிதி ஜெயராஜா இப்போது அந்த அமைப்பில் இல்லை. ஆனால் உலகத்தமிழர் பேரவையில் இன்று அவரே அமெரிக்க பிரதிநிதி. அவரு டன் அவரது மனைவியும் இருக்கிறார் என்பது அவர்கள் வெளியிட்ட இமாலய ஆவணத்தின் மூலம் தெரிய வந்திருக்கின்றது. ஏனெனில் அதில் அமெரிக்காவின் சார்பில் அவரே கையெழுத்திட்டிருக்கிறார்.

இவ்வாறே இன்று உலகத்தமிழர் பேரவையில் அங்கம் வகித்த எந்த அமைப்பும் அதில் இல்லை. ஒருசில தனிநபர்களே அதில் அங்கம் வகிக் கின்றனர். அதிலும் அவர்கள் அனை வரும் தாயகத்தில் ஓர் அரசியல்வாதி மீதான தமது அதீத விசுவாசிகள் என்பதும் கவனத்திற்குரியது.

அந்த அமைப்பு திடீரென்று இலங்கை வந்ததும், அதேவேளை இங்குள்ள சில முற்போக்கான பௌத்த தேரர்களையும் இணைத்துக் கொண்டு ஜனாதிபதியைச் சந்தித்த பின்னர் தான் பல விடயங்கள் வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றன.

இவர்கள் இந்த மதகுருமாரை கடந்த ஏப்ரல் மாதம் நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் சந்தித்ததா கவும் அப்போது அவர்களுடன் இணைந்து இமாலய பிரகடனம் என்ற பெயரில் ஒரு பிரகடனம் தயாரித்ததா கவும் கூறிக்கொண்டு அதனையே ஜனாதிபதியிடம் கையளித்திருக் கின்றனர்.

நல்ல விடயம்தான். இந்த நாட்டில் எந்த ஒரு தீர்வு வருவதானாலும் அதனை மூர்க்கத்தனமாக எதிர்ப்பவர் கள் பௌத்த குருமார் தான். அதிகம் ஏன், பதின்மூன்றை அமுல்படுத்தப் போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்ததும், பாராளு மன்றத்தை நோக்கி படையெடுத்த ஆயிரக்கணக்கான பௌத்த தேரர்கள், பதின்மூன்றாம் திருத்தத்தின் பிரதியை தீயிட்டு கொழுத்தியிருந்தது நாம் அறிந்ததுதான். எனவே தேரர்களின் ஆதரவு இல்லாமல் எந்தத்தீர்வும் சாத்தியமானது இல்லைத்தான். ஆனால், அதற்காக அவர்கள் அணிசேர்த்திருக்கும் தேரர்கள் சொல் வதை மற்றையவர்கள் கேட்பார்களா என்பது வேறு விடயம்.

ஆனாலும், இதுகாலவரை புலிக ளின் கொள்கைகளை வழிநடத்திச் செல்வபவர்களாக தங்களை அடை யாளப்படுத்திய அவர்கள், இன்று இமாலய பிரகடனத்தில் மூலம் ஒரு விடயத்தை தெளிவாக் சொல்லி யிருக்கிறார்கள். அதனைத்தான் இந்தப் பத்தியிலும் அடிக்கடி வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

இமாலய பிரகடனத்தின் மூன்றாவது கூற்று இப்படி சொல்கி றது:

"மாகாண மட்டத்தில் போதுமான ளவு அதிகாரப்பகிர்வினை உறுதிப் படுத்தியும், தனிநபர் மற்றும் கூட்டு உரிமைகளுக்கு உத்தரவாதமளிக் கக்கூடிய, சமத்துவம் மற்றும் அனைத்து மக்களுக்கும் சமமான குடி யுரிமையை முன்னிலைப்படுத்தியதும் அதற்கான பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களை உள்ளடக்கியதுமான ஓர் அரசியலமைப்பை உருவாக்குதல், அதுவரை நடைமுறையில் இருக்கும் அரசியலமைப்பில் உள்ளவாறான அதிகாரப்பகிர்வினைக் கண்ணியத்து டன் நடைமுறைப்படுத்தல்."

அதாவது, மாகாண மட்டத்தில் அதிகாரப்பகிர்வை உறுதிப்படுத்தி புதிய அரசியலமைப்பை உருவாக்குவ தென்றும், அதுவரை இருக்கின்ற பதின்மூன்றை கண்ணியத்துடன் நடைமுறைப்படுத்தவும் கேட்டிருக்கி றார்கள்.

கவனியுங்கள், புதிதாக அரசியல மைப்பை உருவாக்குகின்றபோதும், மாகாண அதிகாரப்பகிர்வை கைவிட்டு விடவேண்டாம் என்றும் கேட்டிருக்கிறார்கள்.

**- ஊர்க்குருவி.**

# பருத்தித்துறை கடற்பரப்பில் 25 இந்திய மீனவர்கள் கைது!

வடமராட்சி, டிசெ. 11

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன் பிடித்த குற்றச்சாட்டில் 25 இந்திய மீனவர்கள் பருத்தித்துறை கடற்பிராந்தி யத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீனவர்களும் 2 படகுகளும் கடற்படை யினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. நேற்று அதிகாலை இவர்கள் கைதுசெய்யப்பட் டனர் என்று கடற்படை பேச்சாளர் கப் டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்தார்.

நேற்று காலை இந்திய மீனவர்கள் 25 பேரும் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டனர் என்றும் கடற் படை பேச்சாளர் கூறினார்.

மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மீனவர்கள் மயிலிட்டி கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக் கப்படவுள்ளனர். கையிலிருந்து மீன் பிடிக்க வந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

வருடத்தின் இதுவரையாக காலப் பகுதியில் நாட்டின் கடல் எல்லையை மீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் 33 இந் திய படகுகளுடன் 220 இந்திய மீனவர் கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படை தெரிவித்துள்ளது. (ஐ- 02)

# வீட்டுக்குள் புகுந்து யுவதியிடம் ஏ. ரி. எம். அட்டை பறித்தவர் கைது!

வடமராட்சி, டிசெ. 11

வீட்டுக்குள் புகுந்து யுவதியை அச்சுறுத்தி அவரின் வங்கி ஏ. ரி. எம். அட் டையை திருடிய குற்றச்சாட்டில் சந்தேக நபரான இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட் பட்ட பகுதியில் வீடொன்றுக்குள் புகுந்த தனியாக இருந்த யுவதியை மிரட்டி அவ ரின் ஏ. ரி. எம். அட்டையை பறித்து சென்றுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் யுவதி நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தபோது, திருடப்பட்ட வங்கி ஏ. ரி. எம் அட்டையை பயன்படுத்தி பல் பொருள் அங்காடி ஒன்றில் சந்தேகநபர் பொருட்களை வாங்கியமை தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சந்தேகநப ரான இளைஞரை கைது செய்தனர்.

(ஐ- 02)

# தாமரை கோபுரத்தில் சாகச விளையாட்டு!

கொழும்பு, டிசெ. 11

கொழும்பு தாமரை கோபுரத்தில் அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் இருந்து 'விளையாட்டு பாய்ச்சல்' என அழைக்கப் படும் ஒரு வகை சாகச விளையாட்டு அறி முகப்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

உலகிலேயே, தலைநகரம் ஒன்றில் பல வசதிகளை கொண்ட 185 மீற்றர் உயர மான கோபுரத்தில் இருந்து இந்த விளை யாட்டை மேற்கொள்வது இதுவே முதல் முறை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெளிநாட்டு நிறுவனம் ஒன்றால் இந்த விளையாட்டு அறிமுகப் படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள் ளது. அத்துடன், எதிர்வரும் காலத்தில் கோபுரத்துக்கு அருகாமையில் உள்ள பேரா ஏரியில், வெளிநாட்டு நீர் விளை யாட்டு ஏற்பாட்டாளர்களின் ஒத்துழைப் புடன் பல விளையாட்டுகளை அறிமுகப் படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இது தவிர, வெளிநாட்டு முதலீட்டு டன் 'கசினோ' நிலையம் ஒன்றும் இந்த கோபுரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ)

# 13 வயது சிறுமி துஷ்பிரயோகம் தாயின் 2ஆவது கணவர் கைது!

கொழும்பு, டிசெ. 11

13 வயதான சிறுமியை வன்புணர்ந் தார் என்ற குற்றச்சாட்டில் சிறுமியின் இரண்டாவது கணவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மொனராகலை குடோயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

7ஆம் வகுப்பில் கல்வி கற்கும் சிறுமி தனது தாய், தங்கை, சகோதரன் மற்றும் தாயின் இரண்டாவது கணவர் ஆகியோ ருடன் வசித்து வந்துள்ளார்.

இந்தநிலையில், தாய் மற்றும் சகோ தரர்கள் வீட்டின் வெளியறையில், தூங் கிக்கொண்டிருக்கும் போதே சிறுமி வன் புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் என்று அறிய வருகின்றது.

இதுபற்றி சிறுமி தனது தாயிடம் கூறாததால் வகுப்பு ஆசிரியருக்கு தகவல் தெரியவந்துள்ள நிலையில் ஆசிரியர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள் ளார்.

மேலும் சிறுமியிடம் மேற்கொள்ளப் பட்ட மேலதிக விசாரணைகளின்போது, புத்தல பிரதேசத்தில் வசிக்கும் பெரியப் பாவின் மகனால் தான் முதலில் வன்பு ணர்வுக்கு உட்படுத்தப்பட்டதாக தெரி வித்துள்ளார்.

இதனையடுத்து சிறுமி மருத்துவ பரி சோதனைக்காக மொனராகலை மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளார்.

# திறந்த வெளி சிறையிலிருந்து கைதி ஒருவர் தப்பியோட்டம்!

கொழும்பு, டிசெ. 11

வீரவில திறந்தவெளி சிறைச்சாலை முகாமில் இருந்த கைதி ஒருவர் தப்பியோ டியுள்ளார் என்று வீரவில பொலிஸார் தெரிவித்தனர்.

திறந்தவெளி சிறைச்சாலையில் பயிரி டப்பட்டுள்ள பயிர்களை வன விலங்கு களிடமிருந்து பாதுகாப்பதற்காக காவல் பணியில் அமர்த்தப்பட்டிருந்த குறித்த கைதி சிறைக்காவலர்களை ஏமாற்றி தப்பி யோடியுள்ளார்.

மேலும் அவரை கண்டுபிடிப்பதற்காக வீரவில திறந்தவெளி சிறைச்சாலையை சுற்றி சிறைச்சாலை அதிகாரிகள் தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகளை வீரவில பொலிஸார் ஆரம்பித் துள்ளனர் (ஐ)

யாழ்.கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற் பனைக்குண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலை யத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந் துள்ளது. 55 மில்லியனுக்கு (5 கோடியே 50 லட்சம்) மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு : +447963743585 (Whatapp), 0212227141(Sri Lanka)

E.mail : Jamesraj_uk@yahoo.co.uk

ஈழநாடு
Eelanadu
11.12.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், கார்த்திகை 25

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சம்பந்தனின் நிலைமை

திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னைநாள் தலைவருமான இரா. சம்பந்தன் திருகோணமலையில் தனது ஆதரவாளர்கள் புறக்கணிப்பட்டமை தொடர்பில் விசாரணை செய்யுமாறு கோரி கட்சியின் தலைமைக்கு எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்திருக்கிறாரென செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

ஓர் அரசியல் கட்சியின் தலைவர் எவ்வாறு இருக்கக்கூடாது என்பதற்கான ஒரு சிறந்த உதாரணம்தான் சம்பந்தன். 2009இல் யுத்தம் முடிவுற்றபோது இரா. சம்பந்தன் எவராலும் தவிர்க்க முடியாததோர் அரசியல் தலைவராக வெளியில் தெரிந்தார். அன்றைய சூழலில் சம்பந்தனை தவிர்த்து தமிழ் மக்களுக்கு அரசியல் இல்லை என்னும் நிலைமையிருந்தது. மரத்தை சுற்றி கொடிகள் படர்வதுபோல் சம்பந்தனை சுற்றியே அனைத்து கட்சிகளின் தலைவர்களும் வட்டமிட்டனர்.

சம்பந்தனது தலைமையில் பணியாற்றுவதற்கு எவருமே பின்நிற்கவில்லை. வரலாற்றில் முதல் முறையாக முன்னாள் ஆயுத இயக்கங்கள் அனைத்தும் சம்பந்தனின் தலைமையை ஏற்றுக்கொண்டன. ஆனால், சம்பந்தனோ அனைவரையும் அவரணைத்து பயணிக்கும் வரலாற்றுப் பொறுப்பை புறக்கணித்தார். தன்னை நோக்கி அனைவரும் வந்ததை அவர்களின் இயலாமைபோல் புரிந்து கொண்டார். அவர்களை கீழ்த்தரமாக நடத்த முற்பட்டார்.

தமிழரசு கட்சி ஒன்றுதான் தனித்துவமானது - அனைவரும் அதனது தலைமையில்தான் இருக்க முடியும் என்றவாறு ஏனைய கட்சிகளின் தலைவர்களுக்கான இடத்தை முற்றிலுமாகப் புறக்கணித்து தேர்தலில் போட்டியிடுவதற்கான ஆசனங்களைக்கூட, யாசகம் வழங்குவது போன்றே கையாண்டார். ஒரு தலைவன் எவ்வழியோ அவ்வழிதான் தொண்டர்கள் என்பதுபோல் சம்பந்தனின் ஆதரவின் கீழ் தமிழரசு கட்சியின் இரண்டாம் நிலை தலைவர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய கட்சிகளின் தலைவர்களை கேவலமாக நடத்த முற்பட்டனர். இது தொடர்பில் சம்பந்தனிடம் அவர்கள் முறையிட்ட போதும் அவர்களின் கவலைகளை சம்பந்தன் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை.

அனைவரையும் கேவலப்படுத்திய சம்பந்தனின் இன்றைய நிலைமை என்ன? தனது சொந்த மாவட்டத்தில் தன்னால் அரசியலுக்கு கொண்டுவரப்பட்டவர்கள் புறக்கணிப்படுவது தொடர்பில் விசாரணை செய்யுமாறு தனது கட்சியிடமே சம்பந்தன் கோருகின்றார். சம்பந்தனால் அரசியலுக்கு கொண்டுவரப்பட்டவர்கள் அவரை பதவி விலகுமாறு கோருகின்ற அளவுக்கு அவரது நிலைமை கீழறங்கியிருக்கின்றது.

ஒரு தலைவன் நீரைப் போன்று இருக்க வேண்டுமென்று ஒரு கூற்றுண்டு. நீர் அனைத்து அழுக்குகளையும் போக்கவல்லது. தன்னை அழுக்காக்கி தன்னை நோக்கி வருவதை சுத்தமாக்கும் பண்புடையது. அதனால்தான் ஒரு தலைவன் என்பவன் நீரைப் போன்று இருக்க வேண்டுமென்று கூறப்படுவதுண்டு.

அப்படியான சந்தர்ப்பம் ஒன்றை ஆற்றுவதற்கான வாய்ப்பை வரலாறு சம்பந்தனின் காலடியில் வைத்தது. ஆனால், சம்பந்தனோ அனைத்தையும் நாசமாக்கினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்னும் நிலையில் சம்பந்தன் செயல்பட்டிருந்தால் இன்று தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்தளவு சிதறியிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. ஆகக் குறைந்தது, தனித்துமான கட்சி, பெரிய கட்சி, பாரம்பரியமான கட்சி - என்றெல்லாம் சம்பந்தனால் நற்சான்றிதழ் வழங்கப்பட்ட தமிழரசு கட்சியின் தலைமைக்கே சண்டையிட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இதற்கு ஜனநாயகம் என்னும் முகமூடியின் மூலம் விளக்கமளிக்க முற்பட்டாலும்கூட, இதுவும் சம்பந்தனது தலைமைத்துவ ஆற்றலின்மையின் விளைவுதான். மொத்தத்தில் சம்பந்தன் ஒரு தோல்வியடைந்த தலைவர். அவருக்கு வரலாற்றில் எந்தவோர் இடமும் இருக்கப் போவதில்லை.

# நாட்டில் ஏற்பட்ட மின் தடை தொடர்பாக சுயாதீன விசாரணை முன்னெடுக்கப்படும்!

## இராஜாங்க அமைச்சர் இந்திக்க

*கொழும்பு, டிசெ. 11*

*நாடு முழுவதும் நேற்று ஏற்பட்ட மின் துண்டிப்பு தொடர்பாக மின்சார சபை மற்றும் எரிசக்தி, மின்சக்தி அமைச்சு மட்டத்தில் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சம்பந்தப்பட்ட தரப்பினர் தொடர்பில் சுயாதீனமாகவும் நேர்மையாகவும் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்பதை பொறுப்புடன் தெரிவிக்கிறோம் என இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த தெரிவித்தார்.*

*நாடு முழுவதும் மின் துண்டிப்பு ஏற்பட்டமை தொடர்பில பாராளுமன்றத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.*

*இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,*

*மின் துண்டிப்பு தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அமைச்சு மட்டத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.*

*அதேபோன்று ஒரு மின் விநியோக கட்டமைப்பு மாத்திரம் செயலிழந்திருந்தால் எவ்வாறு முழு நாட்டுக்கும் மின்சாரம் இல்லாமல் போயிருக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பியுள்ளார். இது தொழில்நுட்ப ரீதியாக ஆராயவேண்டிய விடயம் என்பதை நான் அவருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.*

*இதுவரை நாம் மின் உற்பத்தியை நுரைச்சோலை அனல் மின் நிலையம் மூலம் முன்னெடுக்கின்றோம். அதன் மூலம் 300 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.*

*ஏனைய அனைத்து மின்சாரத்தையும் நாம் நீர் மின் உற்பத்தி மூலமே பெற்று வருகின்றோம். அந்த வகையில் சீரற்ற காலநிலை காரணமாக நீர் மின் உற்பத்தி விநியோக கட்டமைப்பிலேயே இந்த செயலிழப்பு இடம்பெற்றுள்ளது.*

*அந்த சந்தர்ப்பத்தில் 1500 மெகாவோட் மின்சாரத்திற்கான கேள்வி இருந்தது. எனினும் 300 மெகாவோட் மின்சாரமே இருந்தது. அச்சமயம் நுரைச்சோலை மின் விநியோக கட்டமைப்பும் செயலிழந்தது. அந்த வகையில் அனைத்து விநியோக கட்டமைப்புகளும் செயலிழந்தன.*

*இவற்றை வழமை நிலைக்கு கொண்டு வருவதற்கு சுமார் 4 மணித்தியாலங்கள் தேவைப்பட்டன. சிறு மின் உற்பத்தி நிலையங்கள் மூலமே நிலைமையை சரி செய்ய முடிந்தது. மின்சார சபையும் எரிசக்தி, மின்சக்தி அமைச்சும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.*

*அதேவேளை நாம் ஒன்றை குறிப்பிட வேண்டும். 2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படவிருந்த பொல்பிட்டிய, கொத்மலை ஆகியவற்றின் நடவடிக்கைகள் வருடக்கணக்கில் தாமதமாகியது.*

*அதனால் ஏன் இந்தளவு காலதாமதம் ஏற்பட்டது என அது தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் கஞ்சன விஜயசேகர சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். இதற்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. இரண்டு தினங்களுக்கு முன் 5 இலட்சம் பேருக்கு மின்சாரம் இல்லாமலுள்ளதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்தன.*

*எனினும், இந்த வருடத்தில் அனைத்து நாட்களும் எந்த தடையுமின்றி நாம் மின்சாரம் வழங்கினோம். எதிர்பாராத விதமாகவே இந்த செயலிழப்பு ஏற்பட்டது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். அந்த வகையில் மிகவும் சுயாதீனமாகவும் நேர்மையாகவும் அதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்பதை நாம் பொறுப்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றார். (ஐ)*

# வற் வரி திருத்தச் சட்டமூலம் இன்று பாராளுமன்றத்துக்கு!

*கொழும்பு, டிசெ. 11*

*வற் வரி திருத்தச் சட்டமூலம் இன்று திங்கட்கிழமை மீண்டும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.*

*இன்று அதனை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ளவுள்ளதாக அவர் அறிக்கை மூலம் கூறியுள்ளார்.*

*குறித்த சட்டமூலம் கடந்த ஓகஸ்ட் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் பொருட்கள் தொடர்பான பட்டியல் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.*

*குறித்த பொருட்கள் பட்டியலை கோரி எதிர்க்கட்சியினர் நேற்று அநாவசியமான பிரச்னைகளை தோற்றுவிப்பதற்கு முயற்சித்ததாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.*

*வற் வரி திருத்தச் சட்டமூலம் நேற்று காலை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.*

*எனினும், கோரமின்மையால் இது தொடர்பான விவாதம் இடைநடுவே நிறுத்தப்பட்டதுடன் பாராளுமன்ற சபை நடவடிக்கைகள் இன்று திங்கட்கிழமை காலை 9.30 வரை ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






மேடம்

கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதம் வந்துபோகும். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். உயர் அதிகாரிகள் ஆதரிப்பார்கள். நிம்மதி உண்டாகும் நாள்..

இடபம்

எதிர்பாராத தனவரவு உண்டு. பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். அமோகமான நாள்.

மிதுனம்

குடும்பத்தில் உங்கள் கைஓங்கும். உங்களைச் சுற்றி இருப்பவர்களில் நல்லவர்கள், உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் சில முக்கிய ஆலோசனைகள் தருவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

கடகம்

பால்ய நண்பர்கள் தேடி வருவார்கள். புதிய வாகனங்கள் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

சிம்மம்

சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள். முயற்சியால் முன்னேறும்நாள்.

கன்னி

இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். பயணங்கள் சிறப்பாக அமையும். புது வாய்ப்புகள் வரும். உற்சாகமான நாள்.

துலாம்

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது நல்லது. திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

விருச்சிகம்

எதையும் திட்டமிட்டு செய்ய பாருங்கள். வாகனம் அடிக்கடி செலவு வைக்கும். வியாபாபரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். பொறுப்புகள் கூடும். நிதானம் தேவைப்பட வேண்டிய நாள்.

தனுசு

குடும்பத்தினருடன் மனம்விட்டு பேசுவீர்கள். நவீன சாதனங்கள் வாங்குவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தை பெருக்குவீர்கள். சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள்.

மகரம்

எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிந்தனை திறன் பெருகும் நாள்.

கும்பம்

உணர்ச்சிப் பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெறுவீர்கள். மதிக்கப்படுவீர்கள். சாதிக்கும் நாள்.

மீனம்

சந்திராஷ்டமம் இருப்பதால் உணர்ச்சிவசப்படாமல் இருங்கள் இரண்டாவது முயற்சியில் சில காரியங்கள் முடியும். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். கடினமாக உழைக்க வேண்டிய நாள்.

# மிக்ஜம் புயல் நிவாரணம் தமிழக அரசின் பங்கு என்ன?

## அண்ணாமலை கேள்வி



சென்னை, டிசெ. 11

**பொதுமக்களுக்கு வழங்கும் நிவாரணத்தில் தமிழக அரசின் பங்கு என்ன என்று தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார்.**

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தி. மு. க. ஆட்சிக்கு வந்ததும், அந்தஆண்டு டிசெம்பரில் சென்னை மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. உடனடியாக சென்னை முழுவதும் மழைநீர் வடிகால் பணிகள் அமைக்கப் போகிறோம் என்று முதல்வர் ஸ்டாலின் கூறினார். கடந்த 2022ஆம்ஆண்டு முழுவதும் பெரிய அளவிலான மழை ஏதும் இல்லாததால், சென்னையில் கடந்த ஆண்டு மழை நீர் பெரிய அளவிலான பாதிப்பை ஏற்படுத்தவில்லை. ஆனால், தாங்கள் செய்த மழைநீர் வடிகால் பணிகளால்தான், 2022ஆம் ஆண்டு சென்னையில் மழைநீர் தேங்கவில்லை என்று தி. மு. கவினர் பொய் கூறினார்கள்.

மேலும், கடந்த 2022ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்திலேயே 95 சதவீத வடிகால் பணிகள் முடிவடைந்து விட்டதாக கூறியிருந்தனர். தற்போது நவம்பர் மாதத்தில் 98 சதவீத வடிகால் பணிகள் நிறைவுபெற்று விட்டன என அமைச்சர் கே. என். நேரு கூறியிருந்தார். ஆனால், தி. மு. கவினர் சொன்னது அனைத்தும் பொய் என்பதை மழை உணர்த்திவிட்டு சென்றிருக்கிறது.

இந்நிலையில், 98 சதவீத வடிகால் பணிகள் நிறைவு பெற்றுவிட்டன என கூறிய அமைச்சர் கே. என். நேரு, தற்போது 42 சதவீத பணிகள்தான் நிறைவு பெற்றுள்ளன என்று மாற்றி பேசுகிறார்.

மிக்ஜம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நிதியாக ரூ.10 ஆயிரம் வழங்க வேண்டும் என்று தமிழக பா. ஜ. க. கோரிக்கை விடுத்திருந்தது. இந்நிலையில், வெறும் ரூ.6 ஆயிரம் மட்டுமே நிவாரண நிதியாக முதல்வர் அறிவித்துள்ளார். பேரிடர் நிவாரண நிதியாக பொதுமக்களுக்கு இழப்பீடாக ஒரு குடும்பத்துக்கு உடைகளுக்கு ரூ.2,500, உடைமைகளுக்கு ரூ.2,500, மருத்துவ சிகிச்சைக்கு ரூ.5 ஆயிரம் வழங்கப்பட வேண்டும் என்று மத்திய அரசு கடந்த ஜூலை மாதம் தெரிவித்திருந்தது. இதன் அடிப்படையில் தான் ரூ.10 ஆயிரம் நிவாரண நிதி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினோம்.

அனைத்து மாநிலங்களிலும் பேரிடர் காலங்களில் இழப்பீடாக இந்த தொகையை வழங்க வேண்டும் என்று மத்திய அரசு ஏற்கெனவே அறிவித்த நிலையில், தி. மு. க. அரசு தாங்கள் ஏதோ நிவாரண நிதியை தற்போது உயர்த்திருப்பதுபோல, தவறான தகவல் அளித்துள்ளனர். மத்திய அரசு வழங்கியுள்ள பேரிடர் மேலாண்மை நிதியை மட்டுமேபொதுமக்களுக்கு நிவாரணமாக முதல்வர் ஸ்டாலின் அறிவித்திருக்கிறாரே தவிர, மாநில அரசின் பங்கு என்று எதுவுமே இல்லை. இதில் தமிழக அரசின் பங்கு என்ன? தமிழக அரசு நிவாரண நிதியை ரூ.10 ஆயிரமாக உயர்த்தி வழங்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# இழைக்கப்பட்ட அநீதிக்கு தேர்தலில் மக்கள் தி.மு.கவுக்கு பாடம் புகட்டுவர்!

## எடப்பாடி பழனிசாமி



சென்னை, டிசெ. 11

மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு மக்களவை தேர்தலில் தி. மு. கவுக்கு தக்க பாடம் புகட்டுவார்கள் என்று அ. தி. மு. க. பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ. தி. மு. க. சார்பில் நிவாரணப் பணி வழங்கும் நடவடிக்கையின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வானிலை ஆய்வு மையம் விடுத்த எச்சரிக்கையை முதல்வர் அலட்சியப்படுத்தி மெத்தனமாக இருந்ததால், சென்னையில் 30ஆயிரத்துக்கும் மேற்பட்ட சாலைகளில் மழைநீர் தேங்கி மக்கள் பாதிக்கப்பட்டனர். தி. மு. க. அரசு மக்களுக்கு சரியாக உதவவில்லை.மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு மக்களவை தேர்தலில் தி. மு. கவுக்கு தக்க பாடம் புகட்டுவார்கள்.

கோவளம், அடையாறு, கொசஸ்தலை ஆகிய 3 ஆறுகளைசுத்தப்படுத்தி, 2 ஆயிரத்து 400 கிமீ நீளத்துக்கு மழைநீர் வடிகால் அமைக்கும் 5 ஆண்டு திட்டத்தை அ. தி. மு. க. கொண்டுவந்தது. அதில் 1220 கி.மீ நீளத்துக்கு வடிகால் கட்டப்பட்டது. பின்னர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதை கிடப்பில் போட்டுவிட்டு, தங்கள் பணியை சரியாக செய்யாமல் இப்போது எங்களை குறை கூறுகின்றனர்.

திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களில் சுமார் 7 ஆயிரம் ஏக்கர் பயிர்கள் மழை வெள்ளத்தில் மூழ்கின. இவற்றுக்கு உரிய நிவாரணம் அறிவிக்க வேண்டும் - என்றார். (ஐ)

# சென்னை வடிகாலமைப்பு பணி வெள்ளை அறிக்கை அவசியம்!

## விடுதலை சிறுத்தைகளும் வலியுறுத்து

சென்னை, டிசெ. 11

சென்னையில் மழைநீர் வடிகால் பணிகள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடுவது அவசியம் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் சென்னையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த போதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும்,

சென்னையில் மழைநீர் வடிகால் பணிகள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடுவது அவசியம் என்றால் வெளியிடலாம். என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. எவ்வளவு நிதி செலவழிக்கப்பட்டு இருக்கிறது என்பதை பொதுமக்களின் பார்வைக்கு தெரியப்படுத்துவது அவசியமானதுதான்.

மத்திய அரசு ரூ.1,000 கோடி மட்டுமே பேரிடர் நிவாரண நிதியாக வழங்கி இருக்கிறது. தமிழக முதலமைச்சர் ரூ.5,000 கோடி வேண்டும் என்று கோரி இருந்தார். ஆனால், அதில் ஐந்தில் ஒரு பங்கு என்கிற வகையில் ரூ.1,000 கோடி மட்டுமே ஒதுக்க முன் வந்திருப்பது ஏமாற்றம் அளிக்கிறது.

அ.தி.மு.க.வினர் மத்திய அரசுடன் நட்புறவுடன் இருக்கிறார்கள். அவர்கள் மத்திய அரசு அல்லது பிரதமரை வலியுறுத்தி ரூ.5,000 கோடி பெறுவதற்கு ஆதரவு தர முன்வர வேண்டும் - என்றார். (ஐ)

# எங்களுடன் இணைந்தால் நாங்கள் உங்கள் தேவையை நிறைவேற்றுவோம்!

## வடக்கு மக்களுக்கு ஜே. வி. பி. இவ்வாறு அழைப்பு

கொழும்பு, டிசெ. 11

**எங்களுடன் இணையுங்கள் நாங்கள் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வோம் - இவ்வாறு வடக்கு மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார் ஜே. வி. பியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க.**



அத்துடன், வடக்கு மக்கள், ஊழல்மிகுந்த ஆளும்குழுவை தோற்கடிப்பதற்கான தேசிய விடுதலை இயக்கத்திலும் நீங்கள் இணைந்துகொள்ளவேண்டும். எங்களின் நெருங்கிய அயல் நாடான இந்தியா மிகவும் வலுவான அரசியல் பொருளாதார மையமாக மாறியுள்ளமை எங்களுக்கு தெரியும்.

ஆகவே, பொருளாதார அரசியல் முடிவுகளை எடுக்கும்போது அது இந்தியாவை எப்படி பாதிக்கும் என்பது குறித்து நாங்கள் கவனம் செலுத்துவோம். இரண்டு சக்தி வாய்ந்த நாடுகள் மத்தியிலேயே பூகோள அரசியலில் போட்டி காணப்படுகின்றது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இல்லை.

இந்த நாட்டில் சில பிரச்னைகள் உள்ளன என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். குறிப்பாக தமிழர்கள், முஸ்லிம்கள் தொடர்பில் - அவர்களது மொழி கலாசார விடயங்கள் மற்றும் ஆட்சி முறையில் பங்கெடுத்தல் தொடர்பில் பிரச்னைகள் உள்ளன.

இந்த விவகாரங்களுக்கு நாங்கள் தீர்வை காணவேண்டும். வடக்கு மக்களுக்கு தேசிய மக்கள் சக்தி விடுக்கின்ற வேண்டுகோள் இதுதான் எங்களுடன் இணையுங்கள் நாங்கள் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வோம். ஊழல் மிகுந்த ஆளும்குழுவை தோற்கடிப்பதற்கான தேசிய விடுதலை இயக்கத்திலும் நீங்கள் இணைந்துகொள்ளவேண்டும் - என்று இந்தியாவின் தி இந்து நாளிதழுக்கு அவர் அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார். (ஐ)

# கொட்டடி, இருபாலை மக்களுக்கு உலருணவு பொதிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 11

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கும் 'அற்றார் அழிபசி தீர்த்தல்' என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. பகிர்ந்துண்டு வாழ்வோம் என்ற கருப்பொருளில் முன்னெடுக்கப்படும் இத் திட்டத்தின்கீழ் நேற்று முன்தினம் சனிக்கிழமை கொட்டடி, இருபாலை ஆகிய பகுதிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 60 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலருணவுகள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்ச்சி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெற்றது. இதற்கான நிதி அனுசரணையை அமரர் பொ. பரமேஸ்வரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது குடும்பத்தினர் வழங்கியிருந்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் திருமதி பராசக்தி பரமேஸ்வரன் கலந்துகொண்டு உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தார்.

கொரோனா பேரிடர் காலத்தில் ஏற்பட்ட பொதுமுடக்கம் மற்றும் அதனைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சீர்குலைவு காரணமாக வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றன. இதனைக் கருத்திற்கொண்டே கொரோனாத் தொற்று ஏற்பட்ட காலப்பகுதியில் இருந்து தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் நன்கொடையாளர்களின் அனுசரணையோடு அற்றார் அழிபசி தீர்த்தல் என்ற உலருணவுப் பொதிகளை வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொன்னாலையில் நேற்று போராட்டம்!



யாழ்ப்பாணம், டிசெ. 11

அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கடற்கரையோர பிரதேசத்தையும் பொன்னாலை, துருத்திப்பிட்டி பகுதிகளையும் சுவீகரிப்பதற்கு வன ஜீவராசிகள் திணைக்களம் எடுத்துள்ள முயற்சியை கைவிடுமாறு வலியுறுத்தி போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பொன்னாலை சந்தியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இந்த கவனவீர்ப்பு போராட்டதம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 'எமது கடல் எமக்கு வேண்டும்', 'எமது நிலம் எமக்கு வேண்டும்', 'கடலைச் சுவீகரித்து கடற்தொழிலாளர்களை பட்டினிச்சாவிற்குள் தள்ளாதே', 'எமது கடலை சுவீகரிக்க எவருக்கும் அனுமதியில்லை', 'ரணில் அரசே எமது கடலை சுவீகரித்து வரலாற்று தவறைச் செய்யாதே', 'மேய்ச்சல் தரையையும் மயானங்களையும் மாட்டு வண்டி சவாரித் திடல்களையும் சுவீகரிக்கும் திட்டத்தை உடனே கைவிட வேண்டும்' உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தில் பொன்னாலை தொடக்கம் அராலி வரையுள்ள கடற்றொழிலாளர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# காலத்தை நீடித்து வட்டியை குறைத்தால் 1,700 கோடி டொலர் நாட்டுக்கு இலாபமாகும்!

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, டிசெ. 11

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இரண்டாம் கடன் தொகையைப் பெற்றுக்கொள்வதன் மூலம் இலங்கை குறித்து சர்வதேசம் நம்பிக்கை கொள்ளும். ஏனைய நாடுகளுடனான கடன் மறுசீரமைப்பின்போது, நாம் செலுத்த வேண்டிய தொகையை குறைக்கப் போவதில்லை. மாறாக கடன் செலுத்தும் காலத்தை நீடித்து வட்டியைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளே முன்னெடுக்கப்படும். இதனை வெற்றிகரமாக நிறைவு செய்தால், இலங்கைக்கு சுமார் ஆயிரத்து 700 கோடி டொலர் இலாபம் ஏற்படும் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இது குறித்து அவர் தொடர்ந்தும் தெளிவுபடுத்துகையில்,

கடந்த காலங்களில் சீனா, ஜப்பான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுடன் இலங்கை சிறந்த உறவைப் பேணவில்லை. எனினும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் அந்த பிரச்னைகளுக்கு தீர்வு காணப்பட்டு தற்போது இலங்கை ஏனைய நாடுகளுடன் பல கூட்டணி கொள்கையையே பின்பற்றுகின்றது. எமது இந்தக் கொள்கையால் சர்வதேசத்தின் நம்பிக்கையை மீளப் பெற்றுள்ளோம்.

அதற்கமையவே அண்மையில் கடன் மறுசீரமைப்புக்கு அனைத்து நாடுகளிடமிருந்தும் இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. 12ஆம் திகதி நாணய நிதியத்துடன் இடம்பெறவுள்ள பேச்சின் பின்னர் இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து முற்றாக மீண்டுள்ளது என்பதற்கான அறிவிப்பையும் எதிர்பார்க்கின்றோம்.

அதன் பின்னர் கடந்த காலங்களில் இடைநிறுத்தப்பட்ட வெளிநாட்டு முதலீட்டு திட்டங்களை மீள ஆரம்பிக்க முடியும். அதன் அடிப்படையில் 2024 முதல் இரு வாரங்களுக்குள் ஜப்பான் நிதி அமைச்சர் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இதன்போது அவருடன் இலகு ரயில் திட்டம் தொடர்பில் அரசாங்கம் நேரடியாக பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும்.

அது மாத்திரமின்றி வெகு விரைவில் ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஈரான் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்கள் நாட்டுக்கு விஜயம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றோம். பங்களாதேஷ், பாக்கிஸ்தான் உள்ளிட்ட நாடுகளுடன் பொருளாதார வலயங்களை அமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இரண்டாம் கடன் தொகையைப் பெற்றுக்கொள்வதன் மூலம் இலங்கை பெற்றுக் கொள்ளும் வருமானத்திலிருந்து பெற்ற கடனை மீள செலுத்தும் என்ற செய்தியை சர்வதேசத்துக்கு வழங்க முடியும்.

ஏனைய நாடுகளுடனான கடன் மறுசீரமைப்பின்போது, நாம் செலுத்த வேண்டிய தொகையை குறைக்கப் போவதில்லை. மாறாக கடன் செலுத்தும் காலத்தை நீடித்து வட்டியைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளே முன்னெடுக்கப்படும். இதனை வெற்றிகரமாக நிறைவு செய்தால், இலங்கைக்கு சுமார் ஆயிரத்து 700 டொலர் இலாபம் ஏற்படும் - என்றார்.

# சீன அபிவிருத்தித் திட்ட பணிகளில் இலங்கையர்களுக்கு முன்னுரிமை

கொழும்பு, டிசெ. 11

நாட்டில் கடந்த சில வருடங்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் சீன அபிவிருத்தித் திட்டங்களில் இலங்கைத் தொழிலாளர்களுக்கு அதிகளவில் முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது.

சீனாவின் பெல்ட் அன்ட் றோட் திட்டத்தின் ஊடாக நிதியளிக்கப்பட்ட குறித்த திட்டமானது கட்டுமானம் போக்குவரத்து மற்றும் எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளை உள்ளடக்கியுள்ளது.

இந்தத் திட்டங்கள் ஒருபுறம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்கின்ற போதிலும், மறுபுறம் இதில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்கள் இறுக்கமான விதிமுறைகளை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, இலங்கைத் தொழிலாளர்கள் சீனத் தொழிலாளர்களுடன் ஒப்பிடும் போது குறைந்த அளவிலான ஊதியத்தை பெறுவதாக குறிப்பிடப்படுகிறது. அத்துடன், குறைந்தளவான சலுகைகளை அனுபவிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பணியிடங்களில் முதன்மை மொழியாக சீன மொழி பயன்படுத்தப்படுவதன் காரணமாக இலங்கைத் தொழிலாளர்கள் தகவல் தொடர்பாடலில் இடர்களை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்த நிலையில், தொழிலாளர்களுக்கு பல தவறான புரிதல்கள் மற்றும் பிரச்னைகள் எழுகின்றன என்றும் கூறப்பட்டது. (ஐ)

# வடமராட்சியில் ஒருவாரத்தில் 37 டெங்கு நோயாளர்கள்

வடமராட்சி, டிசெ. 11

வடமராட்சி பிரதேசத்தில் கடந்த ஒரு வாரத்தில் 37 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனை தரப்பு தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் டெங்கு காய்ச்சல் காரணமாக (டிசெம்பர் 01-07) கடந்த ஒரு வாரத்தில் மட்டும் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 37ஆக அதிகரித்துள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, கடந்த நவம்பர் மாதத்தில் 52 டெங்கு நோயாளர்கள் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் செப்ரெம்பர் முதல் நவம்பர் வரையான மூன்று மாதங்களில் 98 பேர் டெங்கு காய்ச்சல் பாதிப்பு காரணமாக பருத்தித் துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# நுகர்வோர் அதிகார சபை அதிகாரத்தை படைகளிடம் கொடுத்தால் விலை உயராது!

## சபாநாயகர் மகிந்த யாப்பா கூறுகிறார்



கொழும்பு, டிசெ. 11

**நுகர்வோர் விவகார அதிகார சபையின் அதிகாரத்தை இராணுவத்திடம் ஒப்படைத்தால் மக்கள் இவ்வாறான சுரண்டல்களுக்கு ஆளாக வேண்டியிருக்காது என்று கூறியுள்ளார் சபாநாயகர் மகிந்த யாப்பா.**

ஒரு கிலோ கோழி இறைச்சியை ரூபாய் 800 ற்கு விற்பனை செய்யக்கூடிய நிலை இருந்த போதிலும் கோழி இறைச்சியின் விலை மேலும் உயர்த்தப்படுகிறது. எவ்வாறாயினும் 800 ரூபாய்க்கு விற்பனை செய்ய முடியும் என கூறப்பட்ட கோழி இறைச்சியின் விலை 1200 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

மேலும், நுகர்வோர் விவகார அதிகார சபையின் அதிகாரத்தை இராணுவத்திடம் ஒப்படைத்தால் மக்கள் இவ்வாறான சுரண்டல்களுக்கு ஆளாக வேண்டியிருக்காது. தற்போது நாட்டில் அனைத்து உணவுப் பொருட்களின் விலைகளும் துரித கதியில் அதிகரித்து செலகிறது - என்றும் சொன்னார். (ஐ)

# காணாமல் ஆக்கப்பட்டோருக்காக நீதி கோரி முல்லையில் போராட்டம்!

முல்லைத்தீவு, டிசெ. 11

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு முல்லைத் தீவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல்10 மணியளவில் குறித்த கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

குறித்த போராட்டத்தின் போது "வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு மரணச் சான்றிதழ் வேண்டாம், இழப்பீடு வேண்டாம், காணாமல் ஆக்கப்பட்டோர் பணிமனை வேண்டாம், சர்வதேசமே நீதியைத் தா" போன்ற பல்வேறு கோசங்களையும் எழுப்பி




போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

இந்த போராட்டத்தில் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயல்பாட்டாளர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)



# இலங்கை - இந்திய நட்புறவு ஒருபோதும் மாற்றமடையாது

கொழும்பு, டிசெ. 11

இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவுக்கும், பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஞாயிற்றுக்கிழமைஅலரி மாளிகையில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கை - இந்திய நட்புறவை மேம்படுத்த இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே வழங்கிய ஒத்துழைப்புகளுக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார்.

இதற்கு இந்திய உயர்ஸ்தானிகர், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு ஒருபோதும் மாற்றமடையாது என கூறியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மரம் விழுந்ததால் ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, டிசெ. 11

ராகம - வல்பொல புகையிரத நிலையங்களுக்கிடையிலான புகையிரத பாதையில் மரம் முறிந்து விழுந்தது.

இதனால் பிரதான புகையிரத பாதையின் ரயில் சேவைகள் நேற்று பல மணி நேரம் தாம தமடைந்தன என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

# மிகிந்தலையில் கடமையாற்ற படையினர் விரும்பவில்லை!

கொழும்பு, டிசெ. 11

மிகிந்தலை புனித பூமியில் சேவையாற்ற படைத் தரப்பினர் விரும்பவில்லை என - பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

அத்தோடு, மிகிந்தலை புனித பூமியில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 250 இராணுவத்தினரை மீளப்பெற தீர்மானத்துள்ளதாக அவர் மேலும் குறிப் பிட்டுள்ளார். (ஐ)

## காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் கிளிநொச்சியிலும் நேற்று போராட்டம்



கிளிநொச்சி, டிசெ. 11

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்று கிளிநொச்சியிலும் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இறுதி யுத்தம் நிறைவடைந்த பின்னர் விசாரணைகளுக்காக ஒப்படைத்த நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்களது உறவினர்களுக்கு நீதி கோரி, கடந்த இரண்டாயிரத்து 485 நாட்களுக்கு மேலாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் சுழற்சி முறையில் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தநிலையில், சர்வதேச மனித உரிமைகள் தினமாக இன்றைய தினம், முற்பகல் கிளிநொச்சி ஏ-9 வீதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை உள்ளிட்ட சில பகுதிகளிலும் நேற்று போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### எதிர்ப்பை மீறி மதுபானசாலை;

# தொடர் எதிர்ப்பு நடவடிக்கைக்கு உடுப்பிட்டி மக்கள் தீர்மானம்!

வடமராட்சி, டிசெ. 11

உடுப்பிட்டியில் மக்களின் எதிர்ப்பை மீறி மீளவும் மதுபானசாலைக்கு அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து அதற்கு எதிராக சமூக மட்ட அமைப்புகள் தொடர் நடவடிக்கையில் ஈடுபட தீர்மானித்துள்ளன.

உடுப்பிட்டி விநாயகர் சனசமூக நிலையத்தில் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் ச. சுகிர்தன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இதன்போது, உடுப்பிட்டி சமூகமட்ட அமைப்புகள் இவ்விடயம் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடலை நடத்தின.

கரவெட்டி பிரதேச செயலாளர் நேரடியாகவும், வாய்மொழி மூலமாகவும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், தனக்கு அறிவுறுத்தியதனால் தான் இடத்துக்கான சிபாரிசை வழங்கியதாக குறிப்பிட்டதற்கு இணங்க சமூக மட்ட அமைப்புக்கள் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரை சந்தித்து கலந்துரை



யாடிய பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கையை மேற்கொள்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மற்றும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆகிய வற்றிலிருந்து 500 மீற்றருக்கும் குறைவான தொலைவில் உடுப்பிட்டி சந்தியிலிருந்து நவிண்டில் நோக்கிய வீதியில் இமையாணன் மேற்கில், பிரதான வீதியிலேயே இந்த மதுபான சாலை அமைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இமையாணன் இ. த க பாடசாலையிலிருந்தும் நவிண்டில் தாமோதரா பாடசாலையிலிருந்தும் இந்த மதுபானசாலை மிகக் குறைந்த தூரத்தில் இருப்பதால், இது மாணவர்கள் மத்தியில் மதுபான பாவனையை ஊக்கப் படுத்திவிடும் என்றும் மக்கள் கவலை தெரிவித்தனர். (ஐ-02)

# அஸ்வெசும இரண்டாம் கட்டத்துக்கு ஜனவரி முதல் விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, டிசெ. 11

**அஸ்வெசும இரண்டாம் கட்டத்திற்காக எதிர்வரும் ஜன வரி மாதம் விண்ணப்பங்கள் கோரப்படும் என நிதி இரா ஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**

இரண்டாம் கட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் முதல் கட்டம் பற்றிய விரிவான மீளாய்வை மேற்கொள்ள அரசாங்கம் தயாராக இருப்பதாக இராஜாங்க அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

முதற்கட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் மற்றும் பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் குறித்தும் கவனத்தில் கொள்ளப்படும் என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் பதினான்கு இலட்சத்து 6 ஆயிரத்து 930 பயனாளிகளுக்கான பணம் தற்போது வங்கி கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளன.

பயனாளிகளின் எண்ணிக்



கையை 20 இலட்சமாக உயர்த்தி பொருத்தமானவர்களை தெரிவு செய்ய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. இதற்காக 2024 ஆம் ஆண்டுக்கு 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இரா ஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க மேலும் தெரிவித்தார்.

# தமிழையும் சிங்களத்தையும் கற்கமுயன்று தோல்வியடைந்தேன்!

கொழும்பு, டிசெ. 11

தமிழையும் சிங்களத்தையும் ஒரேநேரத்தில் கற்க முயன்று தோல்வியடைந்துள்ளேன் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்

சிங்கள பத்திரிகை ஒன்றுக்கான பேட்டியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நான் தமிழையும் சிங்களத்தையும் கற்க முயன்றேன். நான் இரண்டையும் ஒரேநேரத்தில் கற்க முயன்றேன் தவறுசெய்தேன் இரண்டு மொழிகளை ஒரேநேரத்தில் கற்கமுயல்வது சவாலான விடயம்.

எனது கடினமான வேலைப் பளுகாரணமாக இரண்டு மொழி



களையும் கற்கமுடியவில்லை. என்னால் அடிக்கடி பயன்படுத் தக்கூடிய் சில சொற்களை கற்க முயல்கின்றேன். எனக்கு தெரிந்த ஒரு சில சொற்களை பேசினாலும் மக்கள் உடனடியாக என்னை நோக்கி வருவதை அவதானித்துள்ளேன்.

எனக்கு மொழிகளை கற்றுக் கொள்வதில் ஆர்வம் அதிகம் பல மொழிகளை கற்றுக்கொள்ள முயல்கின்றேன் - என்றார். (ஐ)

# புதுக்கடை நீதிமன்றின் கட்டடத்தில் தீ பரவியது!

கொழும்பு, டிசெ. 11

கொழும்பு - புதுக்கடை நீதி மன்ற கட்டடத் தொகுதி வளாகத்தில் நேற்று தீ பரவியதாக தீயணைப்புப் பிரிவு அறிவித்தது.

நேற்று அதிகாலை குறித்த தீ பரவியதாக கொழும்பு தீயணைப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், குறித்த தீயை கட்டுப்படுத்த மூன்று தீயணைப்பு வாகனங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

தீ பரவியமைக்கான காரணம் கண்டறியப்படவில்லை. அத்துடன், பரவிய தீயால் எவருக்கும் எந்தவித பாதிப்பும் இல்லை எனவும் அறிய முடிகின்றது.

இந்த சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# அரச அதிகாரிகளுக்கு விசேட முற்பணம்!

கொழும்பு, டிசெ. 11

அரச அதிகாரிகளுக்கு அடுத்த வருடத்துக்கான விசேட முன்பணமொன்றை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன்படி, 4,000 ரூபாய் முன்பணமாக வழங்கப்படஉள்ளதாக பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்தொகை அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் பெப்ரவரி 29ஆம் திகதி வரை வழங்கப்பட உள்ளது.

திறைசேரியின் உடன்படிக்கையின் பேரில், பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர், அனைத்து அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு சுற்றறிக்கை மூலம் இது குறித்து அறிவித்துள்ளார்.

இந்த முன்பணத்தை 2024 ஆம் ஆண்டிற்குள் வசூலிக்க வேண்டும் என்றும் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# செலுத்தப்படாத பணம் இம்மாதம் செலுத்தப்படும்!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



கொழும்பு, டிசெ. 11

கோவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு செலுத்த முடியாத 198 கோடியே 97 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பணம் இந்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தப்படும் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அந்தத் தொகையை செலுத்துவதன் மூலம் கோவிட் தொற்றுநோய் காரணமாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு செலுத்தாமல் இருந்த அனைத்து கட்டணங்களும் முழுமையாக செலுத்தப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு மேலதிகமாக, இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி பணிகளுக்காக நிர்மாண ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 111 கோடிய 25 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் பணத்தையும் இந்த வருட இறுதிக்குள் முழுமையாக வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பொருளாதார நெருக்கடி மற்றும் கோவிட் தொற்றுநோய் காரணமாக இலங்கையின் கட்டுமான தொழில் கடுமையான பின்னடைவைச் சந்தித்தது, இதன் காரணமாக கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஜனாதிபதியின் விசேட கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து, இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக நிதியமைச்சின் செயலாளர் தலைமையில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

இதன்படி, இது தொடர்பான கொடுப்பனவு நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு அதற்கேற்ப நிலுவைத் தொகைகளை செலுத்துவதை நிறைவு செய்யும்.

இதேவேளை, நிர்மாணத்துறைக்காக தனியான அபிவிருத்தி வங்கியொன்றை நிறுவுவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. திறைசேரிக்கு இந்த யோசனை சம்பந்தமாக எண்ணக்கருப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், கிடைக்கும் பதில்களின் அடிப்படையில் புதிய வங்கி ஸ்தாபிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# வெளிவிவகார அமைச்சர் மன தைரியம் அற்றவர்

## பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் சாடல்

கொழும்பு, டிசெ. 10

தற்பொழுது இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மன தைரியம் அற்றவராகவே இருக்கிறார் என பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் சாடியுள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள அவரின் பணிமனையில் நேற்று முன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் மீன் பிடியில் ஈடுபடுவார்கள் என தெரிவித்ததுடன், அதற்காக இந்தியாவால் இலங்கை மீனவர்களுக்கு பணம் வழங்குவது தொடர்பில்



இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் மேனனுடன் கலந்துரையாடியதாகவும் அண்மையில் தெரிவித்துள்ளார்.

இந்தியா தருகின்ற ஒரு ரூபாய், இரண்டு ரூபாயை பெற்றுக் கொண்டு வீடுகளிலேயே இருங்கள் என்று சொல்லக்கூடிய அமைச்சர்களால் எப்படி இந்த நாட்டின் பொருளாதாரத்தையும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும்?

இலங்கை கடற்பரப்பில் இலங்கை மீனவர்கள் மாத்திரமே மீன்பிடிக்க முடியும் என வும், அவர்களுக்கு தொந்தரவு செய்ய வேண்டாம் எனவும் தெரிவித்திருந்தால் ஏற்கக் கூடியது. இலங்கையில் வெளியுறவு அமைச்சர் அப்படி கூறமுடியாத நிலையில் உள்ளார்.

காரணம் தமது பதவிகளையும் தமது கதிரைகளையும் இருப்புகளையும் தக்க வைத்துக் கொள்வதற்காகவே இப்படியான கதைகளை சொல்லி வருகிறார்கள் - என்றார். (அ)

# போகம்பரை சிறைச்சாலை நட்சத்திர ஹோட்டலாகிறது

கொழும்பு, டிசெ. 11

கண்டி போகம்பரை சிறைச்சாலையை ஐந்து நட்சத்திர ஹோட்டலாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்துக்கு உள்ளூர் முதலீட்டாளர் ஒருவர் முன்வந்துள்ளதாகவும் போகம்பர சிறைச்சாலையில் வரலாற்றுப் பெறுமதியைப் பாதிக்காத வகையில் இது மேற்கொள்ளப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

போகம்பர சிறைச்சாலை வளாகத்தை புனரமைப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையும் தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுள்ளது. (ஐ)

# நீரோடையில் நீராடிய 17 வயது சிறுவன் பலி!

கொழும்பு, டிசெ. 11

நீரோடையில் நீராட சென்ற மூன்று பேரில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்று நமுனுகுல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் மொனராகலை, அலியாவத்த பகுதியைச் சேர்ந்த 17 வயதுடையவரென அடையாளம் காணப்பட்டுள்ளது.

தமது உறவினர் வீட்டுக்கு சென்றிருந்த குறித்த சிறுவன், மேலும் இரண்டு இளைஞர்களுடன் குறித்த பகுதியிலுள்ள நீரோடையொன்றில் நேற்று முற்பகல் நீராடச் சென்றுள்ளார்.

அதன்போதே, அவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

மனித உரிமைகள் தினத்தில்

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் திருகோணமலையில் நேற்று போராட்டம்!

திருகோணமலை, டிசெ. 11

**சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய பணிமனை முன்பாக கவனவீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.**

வட, கிழக்கு ஒருங்கிணைப்பு குழு வலிந்து கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது 'நீதியான சர்வதேச பொறிமுறை விசாரணை தேவை', 'உரிமைகளே இல்லாத நாட்டில் எதற்கு மனித உரிமைகள் தினம்', 'எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டு பல வருடங்கள் கடக்கின்றது நீதி இல்லை இதனால் எதற்கு இந்த மனித உரிமைகள் தினம்' என



காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தது டன், பல பதாதைகளை ஏந்திய வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

# நாங்கள் முன்னெடுக்கும் அபிவிருத்தியை சாணக்கியன் எம். பி. குழப்பமுயல்கிறார்!

## தமிழ் மக்கள் விடுதலை புலிகள் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, டிசெ. 11

கடந்த பாராளுமன்ற தேர்தலின்போது 30 வருட அபிவிருத்தி திட்ட முன்மொழிவினை கொண்டுவந்த பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனால் ஒரு செங்கல்லைக்கூட களுவாஞ்சிகுடியில் நாட்டமுடியாத நிலையில் தாங்கள் முன்னெடுக்கும் அபிவிருத்தி திட்டங்களை குழப்ப முனைவதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் களுவாஞ்சிகுடி பிரதேச அமைப்பாளர் யோகநாதன் லிபியன் தெரிவித்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அண்மையில் களுவாஞ்சிகுடி பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட வீதி புனரமைப்பு பணியின்போது முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும் சாணக்கியனின் ஆதரவாளருமான வினோராஜ் என்பவரால் தாங்கள் தாக்கப்பட்டனர் என்றும் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக தங்கள் மீது பொய்யான கருத்துகளை வெளியிட்டுவருகின்றனர் எனவும் அவர்கள் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனால் எந்த அபிவிருத்தி நடவடிக்கைகளையும் முன்னெடுக்கமுடியாத நிலையில், இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தனால் களுவாஞ்சிகுடி பிரதேசத்தில் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களை குழப்புவதற்கு முனைவதாகவும் இதன்போது குற்றச்சாட்டுகளை அவர்கள் கூறினார். (ஐ)

# மீன்பிடிக்க சென்ற இருவரை 3 நாட்களாக காணவில்லை!

மட்டக்களப்பு, டிசெ. 11

மட்டக்களப்பு கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள கல்மடு கடல் பிரதேசத்தில் பைவர் இயந்திர படகில் மீன்பிடிப்பதற்காக கடந்த வெள்ளிக்கிழமை கடலுக்கு சென்ற இருவர் மூன்று தினங்களாகியும் வீடு திரும்பவில்லை. இயந்திர படகுடன் காணாமற்போன இரு மீனவர்களை கடற்படையினர் தேடி வருவதாக நேற்று கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

கல்மடு பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய தங்கவேல் தங்கத்துரை மற்றும் 56 வயதுடைய கந்தையா புண்ணியராசா ஆகிய இருவருமே இவ்வாறு காணாமல் போனவர்களாவர்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் கல்குமடு கடற்கரையில் இருந்து பைவர் இயந்திர படகின் மூலம் மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் சென்ற இந்த இருவரும் வீடு திரும்பாத காரணத்தினால் அவர்கள் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்தே, கல்குடா பொலிஸார் கடற்படையினர் மற்றும் மீனவர்களின் உதவியுடன் காணாமல் போனவர்களை தேட ஆரம்பித்தனர். எனினும், அவர்கள் தொடர்பில் எந்த தகவலும் கிடைக்கவில்லை எனவும் மீனவர்களை தொடர்ந்து தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# பெண் வன்புணர்வு; குற்றவாளிக்கு சிறை!

அக்கரைப்பற்று, டிசெ. 11

வாவியில் குளித்துக் கொண்டிருந்த பெண்ணை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றத்துக்காக ஒருவருக்கு கடூழிய சிறைத் தண்டனை விதித்தது அம்பாறை மேல் நீதிமன்றம்.

அம்பாறையில் ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் பெண் ஒருவர் தனது பணி முடிந்து வீட்டுக்கு திரும்பிய பின்னர், அருகிலிருந்த நீர் நிலையில் நீராடிக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயம், குற்றவாளி அவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார். இது தொடர்பான வழக்கில் குற்றவாளிக்கு எதிராக குற்றம் நிரூபிக்கப்பட்டது.

இதையடுத்து குற்றவாளிக்கு 4 ஆண்டுகள் கடூழிய சிறை தண்டனை விதிக்கப்பட்டது. அத்துடன், 10 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது. இதை செலுத்தத் தவறினால் 3 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

அத்துடன், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நட்டஈடு வழங்குமாறும் செலுத்த தவறின் ஒரு வருட சாதாரண சிறைத் தண்டனையும் அனுபவிக்குமாறும் நீதிபதி தனது தீர்ப்பில் கூறினார். (ஐ)

# மதரஸாவில் சிறுவன் மரணம் மேலும் 4 சந்தேகநபர்கள் கைது!

அக்கரைப்பற்று, டிசெ. 11

சாய்ந்தமருது மதரஸாவில் சிறுவன் மர்ம மரணம் தொடர்பில் மேலும் நான்கு பேர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர்.

சாய்ந்தமருது குர்ஆன் மத்ரஸாவில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சிறுவன் ஒருவன் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

சிறுவனின் மரணம் தொடர்பில் மதரஸாவின் நிர்வாகி கைது செய்யப்பட்டிருந்தார். இந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை மதரஸாவில் பொலிஸார் சோதனை நடத்தினர்.

இதன்போது, அங்குள்ள சி. சி. ரீ. வி. கமெராவின் சேமிப்பகமான ஹார்ட்டிஸ்க் களவாடப்பட்டமை தெரிய வந்தது. இது தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் சி. சி. ரீ. வி. கமெரா பொருத்துநர், அங்கு பணியாற்றும் ஊழியர்கள் உட்பட நால்வரை கைது செய்தனர். (ஐ)

# ஆசிரியர்களிடம் பெறப்பட்ட நிதி மீண்டும் வழங்கப்பட்டுள்ளது!

## இலங்கை ஆசிரியர் சங்கம்

மட்டக்களப்பு, டிசெ. 11

கொரோனா காலத்தில் ஆசிரியர்களிடமிருந்து ஒரு நாள் சம்பளத்தை மீளப்பெறல் என்ற வகையில் கிழக்கு மாகாணத்தில் இருந்து பெறப்பட்ட 3 கோடியே 27 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் பணத்தை மீண்டும் அதிபர்கள், ஆசிரியர்களிடம் வழங்குவதற்காக 17 கல்வி வலயங்களுக்கும் திருப்பி கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றை பெறாதவர்கள் பெற்றுக்கொள்ளுமாறும் இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் பொ. உதயரூபன் கருத்து தெரிவிக்கையில்,

"கோவிட் 19 தொடர்பாக கிழக்கு மாகாண பிரதம செயலாளர், கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் மற்றும் மாகாண கல்வி பணிப்பாளர் ஆகியோர் ஒரு நாள் சம்பளத்தினை ஆசிரியர்கள் அதிபர்கள் மற்றும் கல்வியாளர்கள் சம்மதம் இன்றி பெற்றுக் கொண்டமை தொடர்பாக நாங்கள் உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்தோம் அடிப்படை உரிமை மீறல் தொடர்பான வழக்கு.

இந்த வழக்கு இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் கிழக்கு மாகாண இணைப்பாளரும் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் ஆகிய பொன்னுத்துரை உதயரூபன், பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் அத்தோடு நமது தலைவர் பிரியந்த பெர்னான்டோ ஆகியோர் பெயர் குறிப்பிடப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு தாக்கலில் சட்டமா அதிபரும் பிரதிவாதியாக குறிப்பிட்டதன் காரணமாக சட்டமா அதிபர் அண்மையில் இது தொடர்பாக சம்மதம் தெரிவித்து மீண்டும் அந்த ஒரு நாள் பெற்றுக்கொண்ட பணத்தினை திருப்பி செலுத்துவதாக உறுதிமொழி உயர் நீதிமன்றத்தில் வழங்கப்பட்டது.

அந்த அடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் இருந்து பெறப்பட்ட 32.778 மில்லியன் ரூபா பணம் மீண்டும் அதிபர்கள் ஆசிரியர்களிடம் 17 கல்வி வலயங்களுக்கும் திருப்பி கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் மிகக் கூடிய பணத்தொகையாக திருகோணமலை கல்வி வலயத்தில் 2.895 மில்லியன் ரூபாவும், மட்டக்களப்பு கல்வி வலயத்தில் 2.795 மில்லியன் ரூபாவும் கல்முனை கல்வி வலயத்தில் 3.846 மில்லியன் ரூபாவும் மீண்டும் அதிபர்கள் ஆசிரியர்களிடம் ஒரு நாள் பணம் திருப்பி கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த பணத்தினை பெரும்பாலான ஆசிரியர்கள் பெற்றுக் கொண்டுள்ளதோடு அந்த பணத்தினை பெற்றுக் கொள்ளாத ஆசிரியர்கள் அதிபர்கள் மற்றும் கல்விசார ஊழியர்களும் கல்வி திணைக்களத்தின் உடைய கல்வி பணிப்பாளர்களையோ அல்லது அங்குள்ள கணக்காளர்களையோ சந்தித்து அந்த பணத்தினை மீண்டும் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஆக குறைந்த பணம் கையளிக்கப்பட்டிருக்கின்றது 95305 ரூபா கல்குடா வலயத்திற்கு ஆக குறைந்த ஒரு நாள் சம்பளத்தினை பெரும்பாலும் அறவிடவில்லை என குறிப்பிடலாம்.

ஏனைய வலயங்கள் மிகக் கூடுதலான பணத்தினை பெற்றுக் கொண்டிருக்கின்றனர் இந்த பணத்தினை ஓய்வு பெற்றவர்களும் அரசாங்க ஊழியர்களும் கிழக்கு மாகாணத்தில் உள்ள சகலரும் அந்த பணத்தினை மீண்டும் தங்களுடைய குறிக்கப்பட்ட அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆசிரியர்கள் அதிபர்கள் தொடர்ச்சியாக அதாவது இலங்கை அரசாங்கத்தினுடைய சில தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற போது கைது செய்யப்படுவது வழமையாக இலங்கையில் காணப்படுகின்றது.

அடுத்த முறை எமது ஆசிரியர் அதிபர்களுடைய சம்பள முரண்பாடுகளுக்கான தீர்வு இதுவரை வரவு செலவு திட்டத்தில் காணப்படவில்லை.

எனவே, இது எதிர்காலத்தில் தரமான கல்வியையும் இலங்கையினுடைய கல்வி ஒரு அபாயகரமான நிலையை எதிர்நோக்கி இருப்பதை நாங்கள் இங்கு சுட்டிக் காட்ட விரும்புவதோடு இதனை வன்மையாகவும் கண்டிக்கின்றோம்." என தெரிவித்தார். (ஐ)

# கஞ்சா, போதை மருந்துடன் ஆசியரும் பிக்குவும் கைது!

திருகோணமலை, டிசெ. 11

கஞ்சா மற்றும் போதை மாத்திரைகளை வைத்திருந்த விகாராதிபதி மற்றும் ஆசிரியர் என இருவர் திருகோணமலை - உப்புவெளி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உப்புவெளி பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவொன்று கடந்த 7ஆம் திகதி மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 17 போதை மாத்திரைகள், 80 மில்லி கிராம் கஞ்சா, 4 கைபேசிகள், தொலைக்காட்சிப் பெட்டி, 2 எரிவாயு சிலிண்டர்கள், மற்றுமொருவரின் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் 4 தேசிய அடையாள அட்டைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு



காஸா போர் நிறுத்தம்

# ஐ. நா. தீர்மானத்தை தடுத்தது அமெரிக்கா!

நியூயோர்க், டிசெ. 11

**ஹமாஸ் - இஸ்ரேல் போரை நிறுத்துமாறு 99ஆவது விதியைப் பயன்படுத்தி ஐ. நா. பாதுகாப்பு சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை அமெரிக்கா தனது வீற்றோ அதிகாரத்தைப் பயன்படுத்தி நிராகரித்துள்ளது.**



பலஸ்தீனத்தின் காஸாவில் ஹமாஸ - இஸ்ரேல் இராணுவம் இடையே யுத்தம் நீள்கிறது. இந்த யுத்தத்தில் 17 ஆயிரத்து 700 பேர் உயிரிழந்தனர். இரு மாதங்களாக நீடிக்கும் இந்தப் போரில் மக்கள் பெரும் அழிவுகளையும் இன்னல்களையும் சந்தித்து வருகின்றன. இதையடுத்து போரை நிறுத்த அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. இந்நிலையிலேயே போரை நிறுத்த ஐ. நாவில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இதனையே அமெரிக்கா தனது வீற்றோ அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுத்துள்ளது. ஹமாஸ் அமைப்பிடம் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட பணயக் கைதிகள் உள்ளனர். இந்த நிலையில், இந்தத் தீர்மானம் ஹமாஸின் கைகளில் அதிகாரத்தை அளிக்கும் என்று அமெரிக்கா கூறியுள்ளது. இதனால் போர் நிறுத்த பேச்சு தோல்வியில் முடிந்தது.

இதனிடையே, ஐ.நா. பாதுகாப்பு சபை கூட்டத்தில் அமெரிக்காவின் முடிவை வரவேற்பதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார். போர் நிறுத்த பேச்சு தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து ஹமாஸ் மீதான தாக்குதலை தீவிரப்படுத்த உள்ளதாகக் கூறிய அவர், ஹமாஸ் அமைப்பை ஒழிக்கும் வரை போரை தொடர்வோம் என்றும் சொன்னார். (ஐ)



## காஸாவின் வரலாற்று சிறப்புமிக்க கட்டடங்களை காப்பாற்றுங்கள்!

ஹமாஸ் அமைப்பு கோரிக்கை

காஸா, டிசெ. 11

போரில் அழிக்கப்படும் காஸாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடங்களை பாதுகாக்குமாறு யுனேஸ்கோ அமைப்புக்கு ஹமாஸ் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

காஸா நகரத்தில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க கட்டுமானங்களை இஸ்ரேல் சிதைத்து வருவதாக ஹமாஸ் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது. காஸாவின் மிகப்பெரிய ஓமரி மசூதி சிதைக்கப்பட்டிருக்கும் புகைப்படங்கள் சமூக வலைதளத்தில் பகிரப்பட்டுள்ளன. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து புனித தலமாக இருந்து வந்த இந்த பள்ளிவாசல் இப்போது இஸ்ரேல் இராணுவத்தினரால் அழிக்கப்பட்டுள்ளது.

போர் துவங்கியதிலிருந்து இதுவரை 104 பள்ளிவாசல்களும் மூன்றுக்கும் அதிகமான தேவாலயங்களும் இஸ்ரேல் தாக்குதலால் அழிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் நிலை நிறுத்தும் பழமை வாய்ந்த கட்டடங்களை காக்க வேண்டும் என ஹமாஸின் தொல்பொருள் அமைச்சகம் தெரிவித்துள்ளது. காஸாவின் கட்டடக்கலை பாரம்பரியம் இந்த போரில் அழிக்கப்படக்கூடாது எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை, மருத்துவமனைகள், பள்ளவாசல்கள், தேவாலயங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தி வருகின்றது. அந்த இடங்களில் ஹமாஸ் அமைப்பினர் ஒளிந்திருக்கின்றனர் என்று அந்த நாட்டு இராணுவம் குற்றஞ்சாட்டியுள்ளது. (ஐ)

## மெக்சிக்கோ மோதலில் பதினொருவர் மரணம்!

மெக்சிக்கோ சிற்றி, டிசெ. 11

மெக்சிக்கோவில் கொள்ளை கும்பலுக்கும் விவசாயிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 11 பேர் கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வட அமெரிக்க நாடான மெக்சிகோவின் டெக்ஸ்காட்டிட்லான் என்ற பகுதியில் வசிக்கும் மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை அந்த பகுதிக்குள் தானியங்கி துப்பாக்கிகளுடன் நுழைந்த கொள்ளை கும்பல் அவர்களை மிரட்டி பணம் பறிக்க முயற்சித்துள்ளனர். இதற்கு மறுப்பு தெரிவித்த விவசாயிகள் மீது, அந்தக் கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது.

இதற்கு பதிலடியாக விவசாயிகளும் அந்த கும்பல் மீது கத்தி போன்ற ஆயுதங்களால் தாக்கியுள்ளனர். இதில், கொள்ளை கும்பலைச் சேர்ந்த எட்டு பேரும், விவசாயிகள் மூன்று பேரும் என மொத்தம், 11 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர்.

தாக்குதல் நடத்தியவர்கள், போதைப்பொருள் கடத்தும் கும்பலாக இருக்கக்கூடும் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.



## உலகின் செல்வாக்குமிக்க தலைவர் இந்திய பிரதமர் மீண்டும் முதலிடம்!



புதுடில்லி, டிசெ. 11

செல்வாக்குமிக்க உலக தலைவர்களில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார்.

அமெரிக்க தலைநகர் வாஷிங்டனை தலைமையிடமாக கொண்டு பிரபல கருத்துகணிப்பு நிறுவனமான 'மோர்னிங் கன்சல்ட்' செயல்படுகிறது. இந்த நிறுவனம் சார்பில் உலகின் செல்வாக்குமிக்க தலைவர்கள் குறித்து அந்தந்த நாடுகளின் மக்களிடம் அவ்வப்போது கருத்துக் கணிப்பு நடத்தப்படுகிறது. இதன்படி அமெரிக்கா, இந்தியா உட்பட 22 நாடுகளில் 'மோர்னிங் கன்சல்ட்' நிறுவனம் அண்மையில் கருத்து கணிப்பு நடத்தி உலகத் தலைவர்களின் தரவரிசை பட்டியலை வெளியிட்டு உள்ளது.

இந்தப் பட்டியலில் இந்திய பிரதமர் மோடி முதலிடத்தை பிடித்துள்ளார். அவருக்கு ஆதரவாக 76 சதவீதம் பேர் வாக்களித்துள்ளனர்.

மெக்ஸிகோ அதிபர் லோபஸ் ஒபரடோர் 66 சதவீத வாக்குகளுடன் இரண்டாம் இடத்திலும் சுவிற்சர்லாந்து அதிபர் அலைன் பெர்செட் 58 சதவீத வாக்குகளுடன் 3ஆவது இடத்திலும் உள்ளனர். பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா 49 சதவீத வாக்குகள், அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ் 47 சதவீத வாக்குகள், இத்தாலி பிரதமர் ஜோர்ஜியா மெலோனி 41 சதவீத வாக்குகள், பெல்ஜியம் பிரதமர் அலெக்சாண்டர் டி குரோ 37 சதவீத வாக்குகளுடன் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளனர். அமெரிக்க அதிபர் ஜோ பைடன் 37 சதவீத வாக்குகளுடன் 8ஆவது இடத்தில் உள்ளார்.

இந்த ஆண்டில் கடந்த பெப்ரவரி, ஏப்ரல், செப்ரெம்பர் மாதங்களில் 'மோர்னிங் கன்சல்ட்' நிறுவனம் உலக தலைவர்களின் தரவரிசை பட்டியலை வெளியிட்டது. கடந்த பெப்ரவரியில் 78 சதவீத வாக்குகள், கடந்த ஏப்ரல், செப்ரெம்பரில் 76 சதவீத வாக்குகளுடன் பிரதமர் மோடி முதலிடம் பிடித்திருந்தார். கடந்த 9 ஆண்டுகளில் 'மோர்னிங் கன்சல்ட்' வெளியிட்ட கருத்து கணிப்பு முடிவுகளில் 75 சதவீதம் முதல் 80 சதவீத வாக்குகளை பெற்று பிரதமர் மோடி தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## காஸாவில் அரைவாசி மக்கள் பட்டினியால் வாடுகின்றனர்!

உலக உணவுத் திட்டம்

நியூயோர்க், டிசெ. 11

காஸாவின் மக்கள் தொகையில் அரைவாசி பேர் பட்டினியால் வாடுகின்றனர். அங்கு சண்டைகள் தொடர்கின்றன என்று ஐ.நா.வின் மூத்த அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார்.

ஐ. நா. உலக உணவுத் திட்டத்தின் துணை இயக்குநர் கார்ல் ஸ்காவ் கூறுகையில்,

தேவையான பொருட்களில் ஒரு பகுதியே அனுப்பப்பட்டுள்ளன. 10 பேரில் ஒன்பது பேர் தினமும் சாப்பிட முடியாத நிலையே அங்கு நிலவுகின்றது.

காஸாவின் நிலைமைகள் விநியோகங்களை "கிட்டத்தட்ட சாத்தியமற்றது" என்று ஸ்காவ் கூறினார்.

ஹமாஸை ஒழிப்பதற்கும் இஸ்ரேலிய பணயக் கைதிகளை மீட்பதற்கும் காஸா மீதான வான் வழித் தாக்குதல்களை தொடர வேண்டும் என்று இஸ்ரேல் கூறுகிறது.

இதனிடையே, காஸா சுகாதார அமைச்சு, இஸ்ரேல் தனது பழிவாங்கும் போரில் 17 ஆயிரத்து 700இற்கும் அதிகமான மக்களை கொன்றுள்ளது. இதில், 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சிறுவர்கள் என்று கூறியுள்ளது.

இந்த நிலையில், எகிப்தின் எல்லையில் உள்ள ரஃபா மட்டும் திறக்கப்பட்டுள்ளது. இந்த வழி ஊடாக குறைந்தளவிலான உதவிகளே அனுமதிக்கப்படுகின்றன. இதனால், உணவு விநியோகப் பகுதிகளில் குழப்பங்கள் நிலவுகின்றன. ஆயிரக்கணக்கான மக்கள் பசியால் வாடுகின்றனர்.



ஐ. நா. உலக உணவுத் திட்டத்தின் துணை இயக்குநர் கார்ல் ஸ்காவ் இது தொடர்பில் கூறுகையில், 10 பேர்களில் 9 பேர் நாள் முழுவதும் பட்டினியில் கழிக்கின்றது. தண்ணீர், மருந்துக்கு பற்றாக்குறை நீடிப்பதாகவும் அவர் கூறினார். (ஐ)

# பதுளையில் மண்சரிவு; 97 பேர் வெளியேற்றம்!

கொழும்பு, டிசெ. 11

பதுளையின் ஹல்துமுல்லை - அஸ்வெதும மலையில் ஏற்பட்ட பெரும் மண்சரிவு ஏற்பட்டது. முன்னதாகவே, 25 குடும்பங்களை சேர்ந்த 97 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டமையால் உயிர்சேதம் தவிர்க்கப்பட்டதாக ஹல்துமுல்ல பிரதேச செயலாளர் ஏ. கே. ஜே. திருமதி பிரியங்கிகா தெரிவித்தார்.

மண்சரிவுக்கான அடிப்படை அறிகுறிகள் தென்பட்டதை டுத்து 25 குடும்பங்கள் உடன டியாக அவர்களது குடியிருப்பு களில் இருந்து வெளியேற்றப் பட்டன. வீடுகளில் இருந்த உட மைகளும் நேற்றுக்காலை அகற் றப்பட்டன.

ஆய்வுக்குப் பிறகு, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அந்த இடத்தை அதிக ஆபத் துள்ள பகுதியாக அறிவித்திருந் தது. இந்த நிலையில், நேற்று இடம்பெற்ற மண்சரிவின்போது, சுமார் 30 ஏக்கர் நிலப்பரப்பு பாதிக்கப்பட்டது.

இந்த நிலச்சரிவால் 6 வீடு கள் புதைந்துள்ளன. மேலும் பல வீடுகள் பாதிக்கப்பட்டுள் ளன என்றும் தெரிவிக்கப்பட் டது. (ஐ)

# அமைச்சர் சப்ரி கட்டார் பயணம்!

கொழும்பு, டிசெ. 11

வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி கட்டாருக்கான உத்தியோ கபூர்வ பயணத்தை மேற்கொண் டுள்ளார்.

டோஹா மன்ற மாநாட்டில் பங்கேற்பதற்காக அவர் நேற்று பயணமானார்.

இந்த பயணத்தில் வெளிவி வகார அமைச்சர், கட்டார் பிர தமருடன் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார். (ஐ)

# காணாமல் போன சிறுமி சடலமாக மீட்கப்பட்டார்!

கொழும்பு, டிசெ. 11

கொழும்பு - கொலன்னாவை யில் காணாமல் போன சிறுமி சடலமாக மீட்கப்பட்டார்.

15 வயது சிறுமியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். இந்த சிறுமியை வெள்ளிக்கிழமை மாலை முதல் காணவில்லை என்று பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த நிலையில், நேற்று முன் தினம் அவரின் சடலம் கண்டெ டுக்கப்பட்டது. மரணத்துக்கான காரணம் கண்டறியப்பட வில்லை.

சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை கொலன் னாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

- கண்டி இந்திய துணை தூதரகத்தின் -

# நூற்றாண்டு விழாவையொட்டி அஞ்சல் முத்திரை வெளியீடு



கண்டி, டிசெ. 11

கண்டி இந்திய துணை தூத ரகம் அமைக்கப்பட்ட நூற் றாண்டு விழாவின் ஒரு பகுதி யாக இலங்கை அஞ்சல் திணைக் களம் தபால் முத்திரையை வெளியிட்டது.

இந்த நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யு. கமகே, ஊவா மாகாண ஆளுநர் ஏ. ஜே. எம். முஸம்மில், கல்வி இரா ஜாங்க அமைச்சர் அரவிந்த குமார், இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே, பாராளுமன்ற உறுப்பி னர் வேலு குமார், இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் பிரதி அஞ்சல்மா அதிபர் டி. ஏ. ராஜித கே. ரணசிங்க, இந்திய உதவி உயர்ஸ்தானிகர் டாக்டர் ஆதிரா, மூத்த அரச அதிகாரிகள், புலம் பெயர்ந்த இந்தியர்கள் மற்றும் உதவி உயர் ஸ்தானிகராலயத் தின் முன்னாள் அதிகாரிகள் ஆகி யோர் கலந்து கொண்டனர். (ஐ)

# “இஸ்ரேலிலிருந்து இலங்கையர்களின் சடலங்கள் கொத்துக்கொத்தாக வருவதை விரும்புகிறீர்களா?”

கொழும்பு, டிசெ. 11

கொத்து கொத்தாக இலங்கை யர்களின் உடலங்கள் இஸ்ரே லில் இருந்து நாட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவதை அரசாங்கம் விரும்புகின்றதா என்று ஜனாதி பதி செயலணி முன்னாள் உறுப் பினர் ஐ. ஏ. கலிலூர் ரஹ்மான் வினவினார்.

நேற்று அவர் நடத்திய செய் தியாளர் சந்திப்பிலேயே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இஸ்ரேல் - பலஸ்தீனம் பிரச்னை மிகப்பெரிய உலக நெருக்கடியாக தாண்டவமா டிக் கொண்டிருக்கிறது. இந்நி லையில், இலங்கையில் நிலவி வருகின்ற டொலர் பிரச்னைக்கு தீர்வை எட்டுவதற்கு இலங்கை யர்களை இஸ்ரேலுக்கு அனுப்பு கின்ற தீர்மானம் எவ்வகையிலும் ஏற்புடையதல்ல.

இஸ்ரேலியர்களின் கட்டுப் பாட்டு பிரதேசம் தற்போது பெரும் இரும்புக் கோட்டை போல் உள்ளது. முன்பு இஸ்ரே லியர்களின் கட்டுப்பாட்டு பிர தேசத்துக்கு சென்று அங்கு வேலை பார்த்த பலஸ்தீனர்க ளுக்கு இப்போது அனுமதி மறுக்கப்பட்டு அவர்களுக்கு பதிலாகவே இலங்கையர்களை பணிக்கு அமர்த்த இஸ்ரேல் திட்டமிட்டு உள்ளது.

இஸ்ரேலில் இறந்த இலங்கை யர்களின் உடலங்கள் சில ஏற்க னவே நாட்டுக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளன. அவை சிறியள வில் பதற்றத்தை ஏற்படுத்த செய் தன. ஆனால், கொத்து கொத் தாக இலங்கையர்களின் உடலங் கள் நாட்டுக்கு அனுப்பி வைக் கப்பட நேருமானால், மிக மிக மோசமான எதிர்விளைவுகள் ஏற்பட்டுவிடும்.

இஸ்ரேலிய உளவுப் படை யான மொசாட் திட்டமிட்ட வகையில் இலங்கையில் மிக பாரதூரமான நெருக்கடியை உருவாக்கி ஆட்சி மாற்றத்தை கொண்டு வர முயற்சிக்கின்றதா என்கிற சந்தேகமும் எமக்கு உள் ளது. மேற்கத்தேய நாடுகளின் ஆசிர்வாதத்துடன் மொசாட் டின் கழுகு பார்வை இலங்கை மீது விழுந்திருக்கிறது என்று சந்தேகிக்கின்றோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க பூகோள அரசியலை கரைத் துக் குடித்தவர். அவருக்கு இவற்றை நாம் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்று கிடை யாது. ஆனால், நாட்டுப் பற்றா ளர் என்ற வகையில் அவருடைய மேலான கவனத்தை நாம் கோரி நிற்கின்றோம். இலங்கையர்களை இஸ்ரேலுக்கு அனுப்புகின்ற தீர் மானத்தை உடனடியாக கைவிட வேண்டும் - என்றார். (ஐ)

# நாடளாவிய மின்துண்டிப்பு காரணம் அறிய விசாரணை!

## சஜித் பிரேமதாஸ வலியுறுத்து



கொழும்பு, டிசெ. 11

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் மின்சாரம் துண்டிக் கப்பட்டதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. மின்சாரத்துக்காக அதிக பணம் செலவழிக்கும் நாட்டில் பாது காப்பின்மைக்கு காரணம் என்ன என்பதை கண்டறிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த நாட்டுக்கு உகந்த மின்சார கட்டமைப்பு தேவை. மின்சார சபை மறுசீரமைப்பின் போது அதனை தனியாருக்கு மாற்றுவதன் மூலம் எதிர்காலத் தில் நாட்டில் பேரழிவு நிலை உருவாகலாம்.

வெள்ளிக்கிழமை ஒரு மின் கடத்தி பழுதடைந்ததன் காரண மாக முழு நாட்டின் மின்சார கட்டமைப்பும் எவ்வாறு தடை பட்டது என்பது குறித்து பக்கச் சார்பற்ற விசாரணை தேவை. இந்த மின்சார தடையின் ஊடாக நேற்றுமுன்தினம் நாட்டுக்கு ஏற் பட்ட இழப்பு குறித்து துல்லிய மான பகுப்பாய்வு நடத்தப்பட வேண்டும்.

மீண்டும் இவ்வாறானதொரு சந்தர்ப்பம் நாட்டுக்கு ஏற்படக் கூடாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலி யுறுத்தினார். (ஐ)

# பத்து பேர்ச் காணி வழங்கும் அதிகாரம் ஒருங்கிணைப்பு குழுக்களுக்கு வேண்டும்

## மனோ கணேசன் எம்.பி. கோரிக்கை



கொழும்பு, டிசெ. 10

ஜனாதிபதி பெருந்தோட்ட மக்களுக்கு உறுதியளித்த 10 பேர்ச் காணி வழங்கும் அதிகா ரத்தை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்களுக்கு வழங்க வேண்டும். அதன் மூலமே இதனை நடை முறைப்படுத்த முடியும். அனைத்து விடயங்களும் பேச் சில்தான் இருக்கின்றன. அத னால் பேச்சை குறைத்து செய லில் காட்ட வேண்டும் என தமிழ் முற்போக்கு முன்னணி யின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணே சன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு-செலவு திட்டத்தில் கமத் தொழில் அமைச்சு மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ் வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாளாந்த சம்பளம் 1700 ரூபாய் என்ற தொகையை தோட் டத் தொழிலாளர்கள் எங்கே கேட்டார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இந்த 1700 ரூபாய் போதாது. 3000 ரூபாயா வது கிடைக்க வேண்டும். அடுத் தது சம்பள நிர்ணய சபை ஊடாகவா, கூட்டு ஒப்பந்தம் மூலமாகவா அல்லது வருமா னத்தை பகிர்ந்துகொள்ளும் முறை சம்பந்தமாகவா? எந்த அடிப்படையில் தொழிலாளர்க ளின் வருமானத்தை அதிகரிக் கின்றார்கள் என்பதை பொறுத் தவரையில், எனக்கு பிரச்னை இல்லை.

தொழிலாளர்களின், உழைக் கும் மக்களின் வருமானம் அதிக ரிக்கப்பட வேண்டும். சம்பளம் அதிகரிக்க வேண்டும். நாளாந் தம் ஏறிக்கொண்டிருக்கக்கூடிய விலைவாசி உயர்வுக்கு ஏற்ற முறையில் வாழ்வதற்கான வசதி வாய்ப்பு கிடைக்க வேண்டும். அதுதான் முக்கியம். அதனை ஜனாதிபதி புரிந்துகொள்ள வேண்டும்.

ஜனாதிபதி இந்த காணி உரிமை சம்பந்தமாகவும் பேசி யுள்ளார். நல்ல விடயம். ஆனால், பேச்சில் மட்டும்தான் இருக்கி றது. 10 பேர்ச் காணி தருவதாக சொல்லி 400 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார். அந்த ஒதுக் கீடு என்பது அவரின் அமைச் க்கு கீழ்தான் உள்ளது. அந்த விடயத்தில் அவரின் வரவு-செல வுத் திட்ட உரையில், சிங்களத் தில் 10ஆவது விடயமாகவும், தமிழில் 11ஆவது விடயமாக வும் இருக்கிறது. இதில் குழறு படி இருக்கிறது. இந்த குழறு படி என்பது காணி விடயத்தில் இருக்கக்கூடாது.

இந்த செயல்பாடு காணி அமைச்சின் கீழும் இல்லை. பெருந்தோட்ட அமைச்சின் கீழும் அது இல்லை. தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் கீழும் அது இல்லை. ஜனாதிப தியிடம்தான் உள்ளது. சரி, அதில் பிரச்னை இல்லை. இந்த காணி வழங்கல் நடைமுறை யாக்கப்பட வேண்டும் என்றால் தயவு செய்து ஒவ்வொரு மாவட் டத்தின் ஒருங்கிணைப்புக் குழு வுக்கும் அதனை வழங்குமாறு கேட்கின்றேன்-என்றார். (அ)

## புலிகளின்...

செய்யப்பட்டார்.

கைதானவர் ஜா எல பிரதேசத்தில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பணியாற்றியவர் என்றும் இவர் விடுமுறைக்காக மாத்தளையில் உள்ள தனது வீட்டுக்கு வந்திருந்தபோதே கைது செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழ்....

பேச்சாளர் கு. சுரேந்திரன் நேற்று அனுப்பி வைத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

தனி நபர்கள் தமக்குள் பொறுப்பற்ற பிரகடனங்களை உருவாக்கி அவற்றை தமிழ் மக்களின் அரசியல் தீர்வாக முன்மொழிய முற்படுவது கண்டனத்திற்குரியது. உலகத் தமிழர் பேரவை என்ற அமைப்பை சேர்ந்த ஒரு சிலர் பௌத்த பிக்குகளுடன் சேர்ந்து தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை கொச்சைப்படுத்தும்முகமாக முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளோடு கலந்துரையாடாது, அவர்களது அனுமதியை பெறாமல், தன்னிச்சையான அரசியல் செயல்பாடுகளில் ஈடுபடுவது வேதனைக்குரியது. புலம்பெயர் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தம்மை காட்டிக் கொண்டு எமது ஒட்டுமொத்த அரசியல் அபிலாசைகளையும் தவறாக வழிநடத்திச் செல்லும் இந்த நடவடிக்கையை நாங்கள் நிராகரிக்கிறோம். இந்த நடவடிக்கையானது அவர்களின் சொந்த நலன்களை பூர்த்தி செய்வதற்கு தமிழ் மக்களின் அரசியலை பலிக்கடா வாக்கும் செயல்பாடா என்று சந்தேகம் கொள்ள வேண்டியுள்ளது.

ஈழத் தமிழர்களால் தமது அரசியல் அபிலாசைகளை அடைவதற்காக நமது தேசத்தில் அயராத முன்னெடுக்கப்பட்டு வரும் அரசியல் நடவடிக்கைகளுக்கு புலம்பெயர் அமைப்புகள் ஆதரவாக செயல்பட வேண்டுமே தவிர, அவற்றை மலினப்படுத்துகின்ற நடவடிக்கைகளில் அவர்கள் நேரடியாக ஈடுபடுவது வருத்தம் அளிக்கிறது.

அவர்கள் முன்வைத்திருக்கும் பிரகடனத்திலே மாகாணங்களுக்கான அதிகாரங்களை பகிர்வதற்கே புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று கூறி இருப்பது வேடிக்கையானது மாத்திரமல்ல தமிழ் மக்களுடைய அரசியல் இலக்கையே புரிந்து கொள்ளாதவர்கள் என்பதை தெளிவாக எடுத்து காட்டுகிறது.

தமிழ் மக்களின் இறுதி அரசியல் தீர்வு என்பது சமஷ்டி முறையான ஆட்சியமைப்பாகவே இருக்க முடியும் என்பதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மாறாத கொள்கையோடு தொடர்ந்தும் பயணித்து வருகிறது. அந்த அரசியல் தீர்வுக்கான பேச்சில் கலந்து கொள்ள அரசாங்கத்தால் அழைப்பு விடுக்கப்பட்டபோது, நல்லிணக்க நடவடிக்கையாக ஏற்கனவே அரசியல் யாப்பில் இருக்கும் அதிகாரங்களை பகிர்ந்து தேர்தல்களை நடத்துமாறு நாங்கள் அரசாங்கத்திடம் கோரியுள்ளாம். அதன் அடிப்படையில் பேச்சுகளும் நடந்தன. இந்த நேரத்திலே புதிய அரசியல் யாப்பு, மாகாண சபைக்கான அதிகாரங்களை பகிர்வதற்காக ஏற்படுத்தப்பட வேண்டும் என்று முன்வைக்கின்ற கோரிக்கை அபத்தமானதும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசையை குழிதோண்டி புதைக்கும் ஆபத்தான நடவடிக்கையும் ஆகும்.

ஒருசிலரின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களுக்காக தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை மலினப் படுத்தும் நடவடிக்கைகளில் புலம் பெயர் அமைப்புகள், தனிநபர்கள் ஈடுபட வேண்டாம் என்று நாங்கள் கோரிக்கை வைப்பதோடு நமது கண்டனத்தையும் பதிவு செய்து கொள்கிறோம். (ஐ)

## யாழ்...

வரையிலும், காங்கேசன்துறையிலி ருந்து அநுராதபுரம் வரையிலுமே ரயில் சேவைகள் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பலாலி...

விமான சேவைத் துறையும் பெரும் முன்னேற்றத்தை அடைந்து வருவதாகவும் அவர் கூறினார்.

இந்த மாதத்தில் இதுவரையில் 66 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். எதிர்வரும் 5 வருடங்களில் 5 கோடி சுற்றுலா பயணிகளை இலங்கைக்கு வரவழைக்கும் இலக்கை அடைய சுற்றுலா அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் அவர் நடத்திய சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

## ஜனாதிபதி...

உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடினார். இதைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அவர் தெரிவித்தவை வருமாறு,

"தேர்தல் நடக்கும் என்று சொல்வது ஜனாதிபதிக்கு ஒரு வருத்தமாக இருக்கிறது. அவர் இவ்வாறு கூறி தனது அரசியல் இருப்பை தக்க வைத்துக்கொள்ள பார்க்கின்றார். ஆனால், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும். அதை நடத்தினால் தான் ஜனாதிபதி ஏனைய தேர்தல்களைப் பற்றி சிந்திக்க முடியும். அவர் தேர்தலை நடத்த அச்சப்படும் நிலைமையே காணப்படுகிறது. தேர்தல் என்றாலே விசர் நாய் தண்ணீரை கண்டது போல் பயப்படுகின்றார். ஆகவே, அவர் தேர்தலை நடத்தவே மாட்டார்.

எதிர்வரும் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தேர்தலை நடத்தியாக வேண்டும். அதன் பின் யார் ஜனாதிபதியாக வருகின்றார் களோ அவர் தேர்தலை பற்றி யோசிப்பார்.

இலங்கையில் தற்போதைக்கு வேறு தேர்தல்கள் இடம் பெறுவதற்கான வாய்ப்புகள் தென்படவில்லை. ஏதேனும் அதிசயங்கள் அல்லது அழுத்தங்கள் இடம்பெற்றால் மாத்திரமே தேர்தல் நடப்பதற்கு வாய்ப்பு உள்ளது." என தெரிவித்தார்.

## சந்தோஷ்

இலங்கைக்கான தூதுவராக பொறுப்பேற்கவுள்ள சந்தோஷ் ஜா இலங்கையுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்த பேச்சுகளில் முக்கிய பங்காற்றியிருந்தார். இறுதிப் போர் முடிவடைந்த பின்னர் வடக்கு, கிழக்கு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு இந்திய திட்டங்களுக்கும் தலைமை தாங்கியுள்ளார்.

சந்தோஷ் ஜா இந்திய வெளியுறவுக் கொள்கை முன்முயற்சிகளை உருவாக்குவதிலும் பல மூலோபாய உரையாடல் மன்றங்களை நிறுவுவதிலும் நெருக்கமாக செயல்பட்டவர். இதே போன்று பூகோள அரசியல் மற்றும் பொருளாதாரத்தை மையப்படுத்தி உலகளவில் புகழ்பெற்ற ரெய்சினா கலந்துரையாடல்களிலும் முக்கிய பங்கை வகித்துள்ளார். அத்துடன் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் சைபர் பாதுகாப்பு தொடர்பான விடயங்களையும் கையாண்டுள்ளார்.

இறுதிப் போர் இடம்பெற்ற 2007 தொடக்கம் 2010 ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கொழும்பில் உள்ள இந்தியா உயர்ஸ்தானிகராலயத்தில் முதன்மை செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். அதனை தொடர்ந்து அமெரிக்க - இந்திய அணு ஆயுத பேச்சு குழுவின் உறுப்பினராகவும் பொறுப்பு வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## முள்ளிவாய்க்கால்...

மண்டலமான அல்-மவாசி என்ற பகுதி மத்திய தரைக் கடலின் ஒரு குறுகிய நிலப்பரப்பாகும். இங்கு சில கட்டடங்களே உள்ளன. பெரும்பாலான பகுதிகள் மணல் திட்டு மற்றும் விவசாய நிலமாகும். இந்த பாதுகாப்பு வலயத்தின் மொத்த பரப்பு வெறும் 8.5 சதுர கிலோமீற்றராகும் (3.3 சதுர மைல்).

காஸாவில் இருந்து இடம்பெயர்ந்து 18 இலட்சம் பேர் அல் - மவாசி பகுதிக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். ஆனால், இங்கு தண்ணீரோ, மின்சாரமோ இல்லாத நிலையே காணப்படுகின்றது. ஐ. நா. அமைப்பால் பொருட்கள் விநியோகிக்கப்பட்டாலும் இந்தப் பகுதியில் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்று பொதுமக்கள் கூறுகின்றனர்.

இதனிடையே, அல்-மவாசி பகுதியை பாதுகாப்பு வலயமாக இஸ்ரேல் அறிவித்தபோதும், ஒவ்வொரு காலப்பகுதியில் வெவ்வேறு இடங்களை அது தனது வரைபடத்தால் குறிப்பிட்டு வருகின்றது. இது காஸா மக்களிடையே பெரும் அச்சத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், போர் குற்றங்களை இழைக்கும் நோக்கிலேயே இஸ்ரேல் இவ்வாறு நகரும் "மனிதாபிமான வலயங்களை" அறிமுகப்படுத்தியுள்ளதோ என்ற அச்சத்தை பல தரப்பினரிடையேயும் ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே, இந்தப் பகுதியில் ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கும் குறைவான இடத்தில் இஸ்ரேல் படைகளின் டாங்கிகள் உள்ளன என்றும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

## இலங்கை...

இலங்கையின் அர்த்தமுள்ள முன்னேற்றத்துக்கு புலம்பெயர் தமிழர்களின் பெரும்பான்மை பிரதிநிதித்துவத்தின் ஈடுபாடு அவசியம். புலம்பெயர் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் சிலரும் சிங்கள, பௌத்த மத குருமார்கள் மற்றும் தென்னிலங்கை சிவில் சமூகத்தின் ஒரு பிரிவினரும் அண்மையில் மேற்கொண்ட முயற்சி குறித்து ஊடகங்கள் மூலம் அறிந்தோம்.

புலம்பெயர் தமிழர்களில் தெரிந்தெடுக்கப்பட்ட - வரையறுக்கப்பட்ட பிரதிநிதிகளுடன் மட்டும் இந்தக் கலந்துரையாடல் ஆரம்ப மாகியிருப்பது துரதிர்ஷ்டம். உலகத் தமிழர் பேரவை புலம்பெயர்ந்த தமிழ் மக்களில் ஒரு சிலரை மட்டுமே பிரதிநிதித்துவம் செய்கிறது. பெரும்பான்மையான புலம்பெயர் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்புகளை முழுமையாக உள்ளடக்கவில்லை.

கடந்த 2009 செப்ரெம்பரில் பிரான்ஸின் பாரிஸில் உருவாக்கப்பட்ட உலக தமிழர் பேரவை 10 ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட 14 நாடுகளை சேர்ந்த அமைப்புகளின் பிரதிநிதித்துவத் துடன் உருவாக்கப்பட்டது. இவற்றில் பெரும்பாலானவை உலக தமிழர் பேரவையிலிருந்து தற்போது பிரிந்து விட்டன. பிரிட்டிஷ் தமிழ் மன்றம், அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், யு. எஸ். ரி. பி. ஏ. சி. என முன்பு அறியப்பட்ட யுனைற்றட் ஸ்ரேற்ஸ் தமிழ் அக்ஷன் குறூப் (யு. எஸ். ரி. ஏ. ஜி.) போன்றவை உலக தமிழர் பேரவையிலிருந்து விலகிவிட்டன. இதனால், புலம்பெயர்ந்த தமிழ் மக்களில் பெரும்பான்மையினரின் ஆதரவை அந்த அமைப்பு கொண்டிருக்கவில்லை.

வடக்கு, கிழக்கு, தமிழ் மக்களின் கருத்துகளுடன் நெருக்கமாக இணைந்திருக்கும் - புலம்பெயர்ந்த தமிழ் மக்களில் பெரும்பான்மையினரின் ஆதரவை கொண்டுள்ள அமைப்புகள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களை சேர்ந்தவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், சிவில் சமூக, சமய, பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி அடிப்படை கோட்பாடுகளை ஏற்றுள்ளன.

இதன்படி, 1948ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையின் வடக்கு, கிழக்கில் வாழ்ந்த மக்களும் அவர்களின் சந்ததியினரும் தமிழர்களின் நியாயமான அபிலாசைகளை பூர்த்தி செய்யும் ஜனநாயக - அமைதி வழியான - நிரந்தர அரசியல் தீர்வை காண்பதற்கு சர்வதேச கண்காணிப்புடனான வாக்கெடுப்பு அவசியம்.

வடக்கு, கிழக்கில் தற்போதுள்ள அதிகப்படியான இராணுவ பிரசன்னம் காரணமாக இடைக்கால சர்வதேச பாதுகாப்பு பொறிமுறை நிறுவப்பட வேண்டும், மக்களுக்கு அரசியல் உரிமைகளை சுதந்திரமாக வழங்குவதற்காக இலங்கை அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை இரத்து செய்ய வேண்டும்.

இனப் படுகொலை, மனித குலத்துக்கு எதிரான போர் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பரிந்துரை செய்யப்பட வேண்டும். இனப் படுகொலை மற்றும் போர் குற்றத்துக்கு சர்வதேச நீதிமன்றில் விசாரணை - சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இந்த அபிலாசைகளை புரிந்து கொள்ளுமாறும் - அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளுமாறும் சிங்கள, பௌத்த மதகுருமார்கள் மற்றும் தெற்கு சிவில் சமூகத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். இத்தகைய முற்போக்கான நடவடிக்கை அனைத்துச் சமூகங்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தை நோக்கிய குறிப்பிடத்தக்க மாற்றத்தை நிரூபிப்பதுடன், தமிழ்த் தேசிய பிரச்னைக்கு நியாயமான நீடித்த தீர்வை காணவும் பங்களிக்கும் மற்றும் பாதுகாப்பான - வளமான இலங்கைக்கு வழிவகுக்கும் - என்றுள்ளது.

இந்த கூட்டு அறிக்கையில் அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், வட அமெரிக்காவின் தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பு, இலங்கை தமிழ் சங்கம் - அமெரிக்கா, யுனைற்றெட் ஸ்ரேற்ஸ் தமிழ் அக்ஷன் குறூப், உலக தமிழ் அமைப்பு - அமெரிக்கா ஆகிய அமைப்புகள் ஒப்பமிட்டுள்ளன. (ஐ)

## எனது...

நிலையில் அந்தக் கட்சியின் மூலக் கிளைகள் மற்றும் தொகுதி, மாவட்டக் கிளைகள் புனரமைக்கப்படுகின்றன. இந்நிலையில் திருகோணமலையில் நடைபெற்ற கட்சி புனரமைப்பின்போது சம்பந்தனின் ஆதரவாளர்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இது தொடர்பில் இரா.சம்பந்தனின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. இந்த நிலையிலேயே, இந்த விடயம் குறித்து கட்சியின் ஒழுக்காற்றுக் குழு விசாரணைகளை நடத்தி உரிய தெளிவுபடுத்தல்களை செய்ய வேண்டும் என்றும் தவறுகள் இடம்பெற்றிருப்பது உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மீள் தெரிவு முன்னெடுக்கப்பட வேண்டும் - என்றும் கோரியுள்ளார்.

## மின்னல்...

விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக இராஜாங்க அமைச் சர் இந்திக அநுருத்த கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை 5.15 மணியளவில் நாடு முழுவதும் திடீரென மின் தடை ஏற்பட்டது. இந்த மின் தடை 5 முதல் 6 மணித்தியாலம் வரை நீடித்திருந்தது. இதனால், மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# வற் வரியை அதிகரிப்பது நியாயமே இல்லாதது!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, டிசெ. 11

வற் வரியை அதிகரிப்பது நியாயமற்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கட்டடிடத் தொகுதியில் நேற்று செய்தி யாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

2020ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் வருமானம் வீழ்ச்சியடைந்தது. அரசாங்கத்தின் சீரற்ற பொருளாதார முகாமைத்துவத்தால் நாடு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டது.

மொத்த உள்நாட்டு தேசிய உற்பத்தி 12 வீதத்திலிருந்து 8 வீதமாகக் குறைந்த காரணத்தாலும் சர்வதேச மூலதனச் சந்தைகளில் கடன் பெறும் வாய்ப்பை இலங்கை இழந்தது.

செயல்திறனற்ற மூலதன முகாமைத்துவத்தால் உருவாக்கிக்கொண்ட வரிக் கொள்கை ஊடாக இந்நாட்டில் பெரும் மூளைசாலிகள் வெளியேற்றம் ஏற்பட்டுள்ளது. விரிவுரையாளர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கணினி பொறியியலாளர்கள் என பல்வேறு தரப்பினர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

நியாயமான வெளிப்படைத்தன்மையான கருத்துக்களை அடிப்படையாக கொண்ட வரி சூத்திர முறைமை ஒன்றை அறிமுகப்படுத்துவது அவசியமாகும். இலங்கையின் 'பரேட்' சட்டத்தின் ஊடாக சிறுதொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஊழல் புரிவோருக்கு கடன் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

பரேட் சட்டத்தால் இலங்கையில் வங்கிகள் நன்மை அடைந்தாலும், நுண்,சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மையாளர்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவை. வரலாற்றில் முதல் தடவையாக நாடு வங்கு ரோத்து நிலைக்கு தள்ளப்பட வரிச்சலுகை வழங்கியமையே காரணம் - என்றார். (ஐ)

# கிளைமோர் தயாரித்த குற்றச்சாட்டில் முன்னாள் போராளி உட்பட இருவர் கைது

கிளிநொச்சி, டிசெ. 11

**கிளைமோர் குண்டு தயாரித்தார்கள் எனும் குற்றச்சாட்டில் முன்னாள் போராளி ஒருவர் உள்ளிட்ட இருவர் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அதில், முன்னாள் போராளியை மேலதிக விசாரணைக்கு என பயங்கரவாத தடுப்பு பிரிவினர் கொழும்புக்கு அழைத்து சென்றுள்ளனர்.**

மற்றையவர் கிளிநொச்சியில் உள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவினரின் அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். மன்னார் வெள்ளாங்குளம் பகுதியை சேர்ந்த முன்னாள் போராளி ஒருவரும் அவருக்கு உதவியதாக நாச்சிகுடா பகுதியை சேர்ந்த ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

நாச்சிகுடா பகுதியை சேர்ந்தவர் படகுகள் ஒட்டு (பைவர்) வேலைகள் செய்யும் சிறிய தொழிற்சாலையை நடாத்தி வருகிறார். அவரின் தொழிற்சாலைக்கு வெள்ளிக்கிழமை சென்ற பயங்கரவாத தடுப்பு பிரிவினர், கிளைமோர் மூடிகளை ஒத்த பிளாஸ்ரிக் (பைவர்) பொருட்களையும், அதனை செய்வதற்கு பயன்படுத்திய அச்சுக்களையும் மீட்டுள்ளனர்.

அதனை அடுத்து அவரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த வேளை, முன்னாள் போராளி, தொங்கும் பூச்சாடிகளை செய்து தருமாறு கூறி, தன்னிடம் இந்த அச்சுக்களை தந்ததாகவும் , அதனையே தான் வார்த்து கொடுத்ததாகவும் தெரிவித்துள்ளார்.

அவரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் முன்னாள் போராளியை கைது செய்து, மேலதிக விசாரணைக்காக கொழும்புக்கு அழைத்து சென்றுள்ளனர். இதேவேளை, முன்னாள் போராளி சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் பணியாற்றி வருபவர் எனவும், மாவீரர் வாரத்தில் மாவீரர் பெற்றோரை கௌரவிக்கும் நிகழ்வை முன்னிட்டு நடத்தியவர் எனவும், அதனை தொடர்ந்து அவரை பற்றி புலனாய்வாளர்கள் ஊரில் பலரிடம் விசாரித்து தகவல்களை சேகரித்தனர் என ஊரவர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ)

# 8 அம்ச கோரிக்கைககளை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இன்று போராட்டம்!

யாழ்ப்பாணம், டிசெ. 11

75ஆவது உலக மனித உரிமைகள் நாளை முன்னிட்டு வட மாகாண சமூகமட்ட அமைப்புகள் கவன வீர்ப்பு போராட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளன.

மெசிடோ நிறுவனத்தின் அனுசரணையில் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பயங்கரவாத தடை சட்டத்தை உடன் நீக்குதல், கொக்கிளாய் மனித புதைகுழிக்கு நீதியான - விரை வான விசாரணையை முன்னெடுத்தல், மனித சித்திரவதைகளை நிறுத்துதல், பெண்கககுளுக்கு எதிரான வன்முறையை நிறுத்துதல், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான பொறுப்புக்கூறலை விரைவுபடுத்துதல், பூநகரி - பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்வு, சிமெந்து தொழில்சாலை அமைப்பையும் உடன் நிறுத்துதல், மன்னார் தீவில் கனியமண் அகழ்வை உடன் நிறுத்துதல், மன்னார் தீவில் காற்றாலை மின்சாரத்தை அமைக்காது அதனை வேறுபகுதிக்கு மாற்றுதல் ஆகிய 8 அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது. (ஐ)

# நாணய நிதியத்துக்கு அளிக்கப்பட்ட 63வீத வாக்குறுதியே நிறைவேற்றம்!

நியூயோர்க், டிசெ. 11

2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்துடன் பல துணை ஆதார ஆவணங்கள் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கையின் சர்வதேச நாணய நிதியத்தின் தற்போதைய வேலைத்திட்டத்தின் வெளிப்படைத்தன்மை நவம்பர் மாதத்தில் மேம்பட்டுள்ளதாக வெரிட் றிசேர்ச் அமைப்பின் சமீபத்திய அறிக்கை தெரிவிக்கிறது.

இதற்கு முன்னர் "தெரியாதது" என வகைப்படுத்தப்பட்ட ஆறு செயல் திட்டங்களின் முன்னேற்றம் குறித்த தகவல்களை குறித்த ஆதார ஆவணங்கள் வழங்கியுள்ளன.

நவம்பர் இறுதிக்குள் வழங்க வேண்டிய 73 வாக்குறுதிகளில், 12 'நிறைவேறவில்லை', 15 'தெரியாதவை' மற்றும் 46 நிறைவேற்றப்பட்டவை என வகைப் படுத்தப்பட்டுள்ளன. எனவே, நவம்பர் இறுதிக்குள் பூரணமாக வேண்டிய 63வீத உறுதிமொழிகள் சரிபார்க்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், இலங்கையின் ஒட்டுமொத்த செயல் திறன் எதிர்பார்த்த அளவிலும் குறைவா கவே உள்ளது என்று அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

ஐ. எம். எவ். நாளை திட்டத்தின் இரண்டாம் தவணை நிதியான சுமார் 330 மில்லியன் அமெரிக்க டொலரை பெறுவது குறித்து வாக்களிக்கவுள்ளது. இந்த நிதியானது முதலில் செப்ரெம்பரில் எதிர்பார்க்கப்பட்டது - என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பொலிஸ் சேவையில் பெண்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது!

## பாராளுமன்ற விசேட குழுவில் சாடல்

கொழும்பு, டிசெ. 11

பொலிஸ் சேவையில் ஆட்சேர்ப்பு, பயிற்சி, பணியமர்த்துதல் மற்றும் ஓய்வு பெறுதல் என்பன சமமாக இருந்தாலும் பதவி உயர்வில் மாத்திரம் பெண் அதிகாரிகளுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது என பெண் அதிகாரிகள் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தை உறுதி செய்தல் பற்றி ஆராய்ந்து அதன் விதப்புரைகளை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழுவில் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பதவி உயர்வின்போது பெண் பொலிஸ் அதிகாரிகளுக்கு இழைக்கப்பட்ட அநீதி உடனடியாக சரி செய்யப்பட வேண்டும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு பாராளுமன்ற விசேட குழு பரிந்துரைத்துள்ளது.

இலங்கை பொலிஸ் சேவையில் பதவி உயர்வு வழங்கும்போது பெண் பொலிஸ் அதிகாரிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளமை இலங்கையில் பாலின அடிப்படையிலான பாகுபாடுகள் மற்றும் பெண்களின் உரிமைகள் மீறல்கள் குறித்து சிறப்பு கவனம் செலுத்துவதன் மூலம் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தை உறுதி செய்தல் பற்றி ஆராய்ந்து அதன் விதப்புரைகளை பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழுவில் புலப்பட்டது.

இந்தக் குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடிய போது இந்த விடயங்கள் வெளிவந்தன.

தற்போது, மொத்தமாக 26 ஆண்டுகள் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த பிரதான பொலிஸ் பரிசோதகர் பதவியில் 4 ஆண்டுகள் நிறைவடைந்த 92 பெண் பிரதான பொலிஸ் பரிசோதகர்கள் பணியில் உள்ள நிலையில், அவர்களின் பதவி உயர்வு தொடர்பில் குறிப்பிடப்பட்ட முறையோ, வெற்றிடங்களை இனங்காணுவதோ இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என இதன்போது புலப்பட்டது.

இந்த அதிகாரிகளின் ஆட்சேர்ப்பு முறை, சம்பள அளவுத்திட்டம் என்பன ஆண் அதிகாரிகளின் முறைமை போன்று சமமாக இடம்பெறுவதுடன், பயிற்சியும் எந்த மாற்றமுமின்றி ஒரே பயிற்சிப் பாடசாலையில் ஒன்றாக இடம்பெறுவதுடன், பயிற்சியின் பின்னர் பணியில் அமர்த்துவதும் மாற்றம் இன்றி ஒரே வகையில் மேற்கொள்ளப்படுவதுடன் ஓய்வுபெறும் முறைமையும் ஒரே வகையிலேயே இடம்பெறுகின்றது.

எனினும், ஆண் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கும் போது வெற்றிடம் தொடர்பான சிக்கல் எழுப்பப்படுவதில்லை என்றும், பெண் அதிகாரிகளுக்கு மாத்திரம் இந்த வெற்றிடம் தொடர்பான சிக்கல் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எழுப்பப்படுவதாக பரபட்சத்துக்கு உள்ளாகியுள்ள பெண் பொலிஸ் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

அதற்கான பரிகாரம் இதுவரை தயாரிக்கப்படவில்லை என்றும் இதனால் சிரேஷ்டத்துவம் குறைவாக உள்ள ஆண் அதிகாரிகள் பதவி உயர்வு பெறும் அதேவேளை, பெண் அதிகாரிகள் நீண்ட காலம் ஒரே பதவியில் இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக

அத்துடன்,இந்த சிக்கலை தவிர்ப்பதற்கு, இலங்கை பொலிஸ் படையணியில் 15வீதத்துக்கும், அதிகமானவர்கள் பெண் அதிகாரிகள் என்பதால், அனைத்துப் பதவிகளிலும் அந்தந்தப் பதவிகளில் 15 சதவீத பெண் பிரதிநிதித்துவத்துக்கு வெற்றிடம் ஏற்படுத்துவதற்கு இதன்போது பிரேரிக்கப்பட்டது.

தற்போது காணப்படும் சிக்கலை தீர்ப்பதற்கு, ஒரு சந்தர்ப்பத்தில் பதவி உயர்வு முறைமையை தயாரித்தல், இந்த முறைமையோ அல்லது வேறு பொருத்தமான முறைமையை தயாரித்து அந்தந்த பதவிகளுக்கான தகைமைகளை பூர்த்தி செய்துள்ள பெண் அதிகாரிகளை பதவிகளுக்கு நியமிக்கும் முறைமையை தயாரித்தல் மற்றும் குறிப்பிட்ட முறைமையின் மூலம் குறிப்பிட்ட காலப் பகுதியில் பதவி உயர்வு வழங்குவதற்கு நியாயமான முறையைத் தயாரித்தல் என்பன தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் குறிப்பிடுகையில், புதிய வெற்றிடங்களை உருவாக்குவது தொடர்பான விடயங்கள் அடங்கிய முன்மொழிவை முகாமைத்துவ சேவை திணைக்களத்துக்கு அனுப்பிவைத்துள்ளதாகத் தெரிவித்தனர்.

இதன்போது குழுவின் தலைவர், தற்போது பொலிஸ் சேவையில் மொத்த படையணியில் 15 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் பெண் அதிகாரிகள் சேவையிலுள்ளதால் தற்போது காணப்படும் வெற்றிடங்களில் 15 சதவீத்தை பெண் அதிகாரிகளுக்கு ஒதுக்கி இந்த சிக்கலை தீர்க்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குப் பரிந்துரை வழங்கினார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தேசிய உரையாடல் ஒன்றின் ஆரம்பம்: ஒவ்வொரு குடிமகனும் கௌரவம், நம்பிக்கையுடன் அச்சம், சந்தேகமின்றி சம உரிமைகளை அனுபவித்து நிம்மதியாக வாழவல்ல இலங்கை

சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம் (பல்வேறு நிக்காயக்களைச் சேர்ந்த மூத்த பௌத்த பிக்குகள்) மற்றும் உலகத் தமிழர் பேரவை உறுப்பினர்கள் இலங்கை மக்களுக்காக மக்களிடையே இந்த தேசிய உரையாடலைத் தொடங்குவதில் முன்நிற்பதையிட்டு மிகவும் பணிவு அடைகிறோம். இலங்கையில் உள்ள பல்வேறு சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வையும் சமாதானத்தையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் நாம் ஏறக்குறைய ஒரு வருடமாக இதில் ஈடுபட்டு வருகிறோம். ஏப்ரல் 2023 இல் நாகர்கோட்டில் (நேபாளம்) நடந்த ஆரம்ப ஆரம்ப கட்டமைக்கப்பட்ட ஈடுபாடுகள் ஒருவர் ஒருவரது கருத்துக்களை புரிந்துகொள்ளவும், இத் தேசிய உரையாடலைத் தொடங்குவதற்குக் கூட்டாக கட்டமைப்பை உருவாக்கவும் உதவியது. இலங்கை மற்றும் புலம்பெயர் சமூகங்களில் முதல் முறையாக இடம்பெறும் இதுமாதிரி முயற்சியைத் தொடர்வதற்கு வழிகாட்டலாக அமையவிருக்கும் மேலுள்ள தலைப்பைக் கொண்ட 'இமயமலைப் பிரகடனம்' எனும் கூட்டுப் பிரகடனத்தையும் வெளியிட்டோம்.

இன்றைய தினம் இலங்கையில் ஒரு தேசிய உரையாடலின் த்தியோகபூர்வ தொடக்கத்தைக் குறிக்கிறது. இந்த தேசிய உரையாடலில் எம்முடன் இணையுமாறு இலங்கையின் ஒவ்வொரு குடிமகனுக்கும் அழைப்பு விடுப்பது மட்டுமல்லாமல், உங்களது சொந்த உரையாடல்களை ஒருவர் ஒருவருடன் மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம். உங்களுடன் இணைந்து இந்த நோக்கத்தை நனவாக்க நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். எல்லாச் சமூகங்களிலும் உள்ள (சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம்) மௌனமான பெரும்பான்மையினர் தமது சிவில் கடமையை நிறைவேற்றி, இந்த தேசிய உரையாடலை உண்மையான தேசிய இயக்கமாக மாற்றுவார்கள் என்பதில் எங்களுக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. ஒவ்வொரு குடிமகனும் கௌரவத்துடனும், நம்பிக்கையுடனும், அச்சமோ சந்தேகமோ இல்லாமல் சம உரிமைகளை அனுபவித்து நிம்மதியாக வாழக்கூடிய ஒரு புதிய விடியல் எனும் பரிசு இங்கு தொக்கிநிற்கிறது.

**ஈடுபாட்டின் பின்னணி**

இலங்கை அபாரமான ஆற்றல்களைக் கொண்ட நாடு. அதன் வரலாறு முழுவதும் அப்படித்தான் இருந்தது. நாட்டின் முக்கியத்துவம் எப்போதும் அதன் அளவு மற்றும் சிறிய மக்கள் தொகையை விட அதிக மதிப்பு வாய்ந்திருந்தது. ஏறக்குறைய எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு புதிதாக சுதந்திரம் பெற்ற இலங்கை அமைதியான மற்றும் வளமான ஜனநாயகமாக மாறுவதற்கு வேண்டிய பல பண்புகளை கொண்டிருந்தது. பல நூற்றாண்டுகால காலனித்துவத்தில் இருந்து வெளிவந்துகொண்டிருந்த பல நாடுகளுக்கு இலங்கை (அன்றைய சிலோன்) முன்னேற்றத்துக்கு உதாரணமாக விளங்கும் என்று கருதப்பட்டது. இருப்பினும் பல நாடுகள், குறிப்பாக வெவ்வேறு தேசியங்கள் மற்றும் மதங்களைக் கொண்ட நாடுகள், இந்த மாற்றத்தை கடினமாகக் கண்டன. இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. உண்மையில், இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் அதன் அபிவிருத்திப் பாதை ஈற்றில் 2022 இல் அது கடன்தீர்க்க வகையற்ற நாடாக அறிவிக்கப்படுவதற்கு வழிவகுத்தது. அனைத்து சமூகங்களிலும் உள்ள ஏழ்மை மற்றும் குறைந்த வருமானமுள்ள குடும்பங்களில் இதன் தாக்கத்தை அனைவரும் காணக்கூடியதாக உள்ளது.

சமூக மற்றும் பொருளாதாரக் காரணங்களால் உந்தப்பட்டோ அல்லது இன, மொழி, மத வேறுபாடுகள் காரணமாகவோ இடம்பெறும் அரசியல் ரீதியான வன்முறைகளும் எதிர் வன்முறைகளும் இலங்கையை வரையறுக்கும் குணாம்சம்கள் ஆகின. இனப்பிரச்சினையும் அதன் விளைவாக ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் நீடித்த உள்நாட்டுப் போரும் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்திய அத்தியாயங்கள் ஆகும். அதன் நேரடியான மனித இழப்புகள் திகைக்க வைக்கிறது நூறாயிரத்திற்கும் மேற்பட்ட இறப்புகள், பல்லாயிரக்கணக்கான காணாமல் போனவர்கள், இலட்சக் கணக்கானோர் இடம்பெயர்ந்தனர். இது ஒரு புதிய 'தமிழ் புலம்பெயர்' நிகழ்வை உருவாக்கியது. இந்த இழப்புகள் எந்த ஒரு சமூகத்திற்கும் மட்டுப்படுத்தப் பட்டதல்ல என்றாலும், தமிழ் சமூகத்தின் மீதான விகிதாசார பாதிப்பு பன்மடங்கு அதிகமாக இருந்தது.

வன்முறையால் ஏற்படும் மறைமுகத் தாக்கங்களும் இதேபோன்ற பாதிப்பை ஏற்படுத்துகிறது. பல தசாப்தங்களாக அவசரகால ஆட்சி, அதீத இராணுவமயமாக்கல், மனித உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கு மதிப்பின்மை, சித்திரவதை மற்றும் தடுப்புக் காவலில் மரணங்கள், பரந்தளவிலான ஊழல் - இவை அனைத்தும், நீண்ட காலமாக புரையோடிக்கொண்டிருக்கும் இன, மத முரண்பாடுகள் உட்பட மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் திறனோ அனுதாபமோ இல்லாத ஒரு சுயநல அரசியல் வர்க்கத்திற்கு வழிவகுத்தது. அரசியல் மற்றும் ஆட்சி முறைகள் மீதான மக்களின் நம்பிக்கை அடிமட்டத்தில் உள்ளது. இத்தகைய நிலைமைகளின் கீழ், நாடு ஆழ்ந்த பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருப்பதில் ஆச்சரியமில்லை.

இருப்பினும், இந்த சகிக்கமுடியாத நிலைமைகள் புதிய விழிப்புணர்வுக்கு வழிவகுத்ததுடன், சில அக்கறையுள்ள குடிமக்கள் மேற்கொண்டுள்ள புதிய முயற்சிகள் கார் மேகங்களுக்கு வெள்ளிக் கோடுகள் போலுள்ளன. இலங்கையில் உள்ள பல்வேறு சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வு மற்றும் சமாதானத்தை மேம்படுத்துவதற்காக "சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம்" சார்ந்த சில முக்கிய பௌத்த பிக்குகளாலும், உலகத் தமிழர் பேரவை உறுப்பினர்களாலும் அத்தகைய ஓர் ஆர்வமுள்ள அணுகுமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**இலங்கை மக்களுக்காக மக்களிடையே ஓர் உரையாடல் 'சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம்' மற்றும் 'உலகத் தமிழர் பேரவை' முன்னெடுத்தன. அதையொட்டி வெளியிடப்பட்ட அறிக்கை.**

**நாகர்கோட் உரையாடல்**

இந்த கலந்துரையாடல்கள் இரு தரப்பினருக்குமிடையில் பொதுவான தன்மைகள் இருப்பதை வெளிப்படுத்தியது. இரு தரப்பினரும் சமரசம் செய்ய முடியாத அளவுக்கு வேறுபாடுகளைக் கொண்ட தீவிர எதிரிகள் என எண்ணப்பட்டபோதிலும் - 'நாட்டின் அனைத்து மக்களினங்களுக்குமான ஒரு சிறந்த இலங்கை எனும் பொதுவான தொலைநோக்கு' - அவர்களிடம் காணப்பட்டது. நாட்டில் இன, மத நல்லிணக்கத்தை சீர்குலைப்பதில் 'புரிந்துகொள்ளாமையும் மற்றவர் பற்றிய பயமும்' தான் அடிப்படைக் காரணிகள் என்பது தெளிவாகத் தெரிந்தது.

சிங்கள பௌத்த சமூகம், தமது விரோத சக்திகளாக கருதும் சிறுபான்மை சமூகங்கள் மற்றும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடமிருந்து தாம் வாழும் ஒரே நாட்டின் வரலாறு மற்றும் தனித்துவமான அடையாளத்தையும் பெருமையையும் பாதுகாப்பது பற்றி அச்சம் கொண்டுள்ளது. மறுபுறம், தமிழ் மக்களின் உணர்ச்சிகளும் அரசியலும் எப்போதும் திட்டமிட்ட அரச நடவடிக்கைகளின் மூலம் தாம் வரலாற்றுரீதியாக நீண்ட காலமாக வாழ்ந்து வரும் பகுதிகளில் அவர்களின் வரையறுக்கும் அடையாளத்தையும் இருப்பின் சாத்தியத்தையும் இழக்கின்றனர் என்ற ஒரு பிரதிபலிப்பு அச்சத்தால் இயக்கப்பட்டு வருகின்றன.

பௌத்த பிக்குகள் பற்றி தமிழ் மக்களிடையே கடுமையான எதிர்மறையான கருத்துக்கள் உள்ளன. அவர்கள் இன மோதல்கள் மற்றும் துன்பங்கள் தொடர்வதற்கு ஒரு முக்கிய காரணியாக பார்க்கப்படுகிறார்கள். ஆனால் இந்தப் பார்வை பல நூற்றாண்டுகளாக இலங்கை பௌத்த பிக்குகள் அவர்களின் சமூகங்களின் நலனை மேம்படுத்துதல் உட்பட ஆற்றிய பல உன்னத பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அதேபோல், பெரும்பான்மை சமூகத்தினரிடையே உள்ள பொதுவான கருத்து பொருளாதார ரீதியாக வெற்றிகரமான மற்றும் செல்வாக்கு மிக்க புலம்பெயர்ந்த தமிழர்கள் இலங்கையை அழிப்பதில் முனைந்துள்ளனர் என்பதாகுமேயன்றி, தமிழரின் இடப்பெயர்வு மற்றும் அவர்கள் தத்தெடுத்த நாடுகளில் எதிர்கொள்ளும் உடல் மற்றும் உணர்ச்சி ரீதியான கஷ்டங்கட்கு தம் பிறந்த நாட்டில் அவர்கள் சந்தித்த நிலைமைகள் தான் காரணம் என்பதை உணரவோ அங்கீகரிக்கவோ தவறுகிறார்கள்.

இந்த மாறுபட்ட கருத்துக்கள் மற்றும் அச்சங்கள் எல்லாம் பகுத்தறிவின் அடிப்படையில் உருவானவையல்ல என்பதை ஒருவர் காணலாம். பல அரசியல் தலைவர்களும், சில மதப் பிரமுகர்கள் மற்றும் தன்னல அக்கறையுள்ளவர்களும் எப்பொழுதும் இந்த அச்சங்களை சுயநல நோக்குடன் பயன்படுத்திக் கொள்ள முயல்வர் என்பதும் உண்மையே. எனவே, இந்தத் தேசிய உரையாடலைத் தொடங்க இலங்கை மக்களாகிய உங்களை நாங்கள் அணுக விரும்பினோம். நாகர்கோட் உரையாடல் இலங்கை முழுவதிலும் மற்றும் புலம்பெயர் சமூகங்களுக்கிடையிலும் மீண்டும் மீண்டும் செய்யப்படல் வேண்டும். இத்தகைய ஓர் செயல்முறைக்கு அனைத்து சமூகங்களையும் சேர்ந்த ஏராளமான மக்களால் அடையாளம் காணக்கூடிய ஓர் வழிகாட்டு ஆவணம் தேவை. நாகர்கோட்டில் செய்யப்பட்ட 'இமயமலைப் பிரகடனம்' நமது இணைந்த பயணத்தின் ஓர் முக்கிய பயனாகும்.

**இமயமலைப் பிரகடனம்**

'இமயமலைப் பிரகடனம்' என்பது எந்தவொரு குறிப்பிட்ட சமூகத்தின் கருத்தியல் அடிப்படைகளிலும் அதிகளவு சார்ந்திருக்காமல், இலங்கைக்கு ஒரு புதிய மற்றும் முற்போக்கான பார்வையை விளக்கிக்கூறும் ஒரு நடைமுறை ஆவணமாகும். ஆறு அறிக்கைகளைக் கொண்டுள்ள இப் பிரகடனம் இங்கு முழுமையாகத் தரப்படுகிறது:

- தமது அடையாளம் மற்றும் பெருமையை இழந்துவிடுவோமா என்ற பயம் எந்த ஒரு சமூகத்திற்கும் ஏற்படாத வகையில் நாட்டின் பல்வகைமைத்தன்மையைப் பேணிப் பாதுகாத்தலும், ஊக்குவித்தலும்.
- பொருளாதார நெருக்கடியை மேற்கொள்ளல், உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க பொருத்தமான அபிவிருத்தி மாதிரியைத் தேர்ந்தெடுத்தல், வெளிநாட்டு இலங்கையர்களதும் மற்றவர்களதும் ஈடுபாடு மற்றும் முதலீட்டிற்கு வசதிசெய்தல், இவை மூலம் நாடு வளர்ச்சிப் பாதையில் இருப்பதை உறுதிசெய்து இலங்கையை நடுத்தர வருமானம் கொண்ட நாடாக மாற்றுதல்.
- மாகாண மட்டத்தில் போதுமானளவு அதிகாரப்பகிர்வினை உறுதிப்படுத்தியும், தனிநபர் மற்றும் கூட்டு உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கக்கூடியதும், சமத்துவம் மற்றும் அனைத்து மக்களுக்கும் சமமான குடியுரிமையை முன்னிலைப்படுத்தியும் அதற்கான பொறுப்புவாய்ந்த நிறுவனங்களை உள்ளடக்கியதுமான ஒரு அரசியலமைப்பை உருவாக்குதல், அதுவரை நடைமுறையில் இருக்கும் அரசியலமைப்பில் உள்ளவாறான அதிகாரப்பகிர்வினைக் கண்ணியத்துடன் நடைமுறைப்படுத்தல்.
- ஒன்றுபட்ட பிளவுபடாத நாட்டினுள் அதிகாரத்தைப் பகிர்தலும், மத, கலாச்சார மற்றும் ஏனைய அடையாளங்களை ஏற்று அத்தகைய அடையாளங்களுக்கு மதிப்பளிப்பதோடு, இனங்களுக்கிடையிலான நம்பிக்கை மற்றும் மதங்களுக்கிடையிலான நம்பிக்கையை கட்டியெழுப்ப உழைத்தல்.
- கடந்த கசப்பான காலங்களில் இருந்து கற்றுக்கொள்ள உறுதிகொண்டு, மீண்டும் இவ்வாறான துயரங்கள் ஒருபோதும் ஏற்படாதிருக்க பொறுப்புக்கூறல் உட்பட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் ஒப்புரவு அடைந்த ஓர் இலங்கைக்கான தூர நோக்கு.
- இருதரப்பு மற்றும் பலதரப்பு உடன்படிக்கைகளுக்கும் இதர சர்வதேசக் கடப்பாடுகளுக்கும் மதிப்பளித்து, சுயாதீனமான மற்றும் ஆற்றல் வாய்ந்த வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இலங்கை ஜனநாயக், சமாதானமான, வளமான உலக நாடுகள் மத்தியில் தனது பெருமையை நிலைநாட்டுவதற்கு வழிசெய்தல்.

**அடுத்த நடவடிக்கைகள்**

பௌத்த துறவிகள் மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகிய இருதரப்பினரும், நாம் இலங்கையின் சில சமூகங்களின் கருத்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் குழுக்களே அன்றி, ஒவ்வொரு குடிமகனதும் அல்லது குழுவினதுமல்ல என்பதை உணர்ந்துள்ளோம். அதே சமயம், நாம் செல்லும் பாதை நேர்மையானது என்பதையும் நாம் அறிவோம். சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கை வரலாற்றில் எடுக்கப்படும் இவ்விதமான துணிச்சலான முதல் கூட்டு முயற்சி இதுவாகும். இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் சமயங்களுக்கிடையிலான புரிந்துணர்வு மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவித்தலின் அடிப்படையில்தான் சமாதானமும் ஸ்திரத்தன்மையும் கட்டியெழுப்பப்பட்டு, அனைவருக்கும் சிறந்த எதிர்காலத்திற்கு வழிசெய்ய முடியும்.

இருபத்தைந்து மாவட்டங்களிலும் பல்சமய பணிக்குழுக்களை நிறுவும் நோக்கில் பல்வேறு மதச் சமூகங்கள் மற்றும் மதத் தலைவர்கள் மட்டில் எங்களின் தற்போதைய கவனம் இருக்கும் அதே வேளையில், 'இமயமலைப் பிரகடனத்தில்' விபரிக்கப்பட்டுள்ள பல விளைவுகள் தக்க அரசியல் செயல்முறைகள் மூலம் மட்டுமே சாத்தியமாகும். எனவே, இந்த முயற்சியை இலங்கையின் அனைத்து முக்கிய அரசியல் கட்சிகள் மற்றும் அக்கறையுள்ளவர்களுக்கு அறிவித்து, இந்த சவாலை எதிர்கொள்ள எழுமாறு கேட்டுக் கொண்டுள்ளோம். ஆயினும் இலங்கை மக்கள் மற்றும் புலம்பெயர் சமூகங்கள் இந்த அரசியல் செயல்முறைகளைப் பெறுமதிமிக்கதாக ஆக்குவதில் ஆக்குவதில் முக்கிய பங்கை வகிப்பார்கள்.

(16ம் பக்கம் பார்க்க)

# கம்யூனிஸ்ட் சீனாவை புரிந்து கொள்வது எப்படி?





கேணல் ஆர் ஹரிஹரன்

சீனா இந்தியாவைப் போல் பழம் பெரும் கலாசாரம் வாய்ந்த நாடு. சீன மொழியை கற்பதுஎளிதல்ல. இந்தியா மேற்கத்திய காலினி ஆதிக்கத்தின் கீழ் 200 ஆண்டுகள் இருந்ததால் உலகுக்கு இந்தியாவை ஒரளவு புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் சீனாவை புரிந்து கொள்வது அவ்வளவு எளிதல்ல. ஹங்கேரிய நாட்டு பாதிரியான லாஸ்லோ லடானி செஞ்சீனாவை நாம் புரிந்து கொள்ள செய்த சேவை மகத்தானது. அவர் கொமிண்டாங் அரசு சீனாவை ஆண்ட போது ஒன்பது ஆண்டுகள் சீனாவில் கல்வி கற்றார். அவர் 1949-ல், கம்யூனிஸ்ட் சீன அரசால் சீன நாட்டிடில் இருந்து வெளியேற்றப்பட்டார். அதன் பின்னர், 1982 ஆம் ஆண்டு வரை அவர் பிரிட்டிஷ் கட்டுப்பாட்டில் இருந்த ஹாங்காங் காலனியில் “சீனச் செய்தி ஆய்வு மையம்” என்ற அமைப்பை ஏற்படுத்தி நடத்தினார். அந்த கால கட்டத்தில், கம்யூனிஸ்ட் சீனாவில் என்ன நடக்கிறது என்பதை எளிதில் அறிய முடியாது. சீன மொழியில் பிரசுரமாகும் சீனாவின் செய்திகளை அலசி, பகுப்பாய்வு செய்து லடோனி அவற்றை ஆங்கிலத்தில் பிரசுரித்தார். சீன செய்தித்தாள்கள், ஆவணங்கள் மற்றும் வானொலி ஒளிபரப்புகளை நம்பி, மாவோவின் சாதனைகளைப் பற்றிய பிரச்சாரத்தை மற்றவர்கள் விழுங்கும்போது, செஞ்சீனாவில் நடந்த நிகழ்வுகளை துல்லியமாக ஆய்ந்து விளக்கம் அளித்தார்.

லடானி தனது கடைசி பதிப்பில், சமகால சீன அரசியலை சூழ்ந்துள்ள புகை மண்டலத்தின் ஊடே உண்மையை தெரிந்து கொள்ள முயற்சிப்பவர்களுக்கு வழிகாட்டும் “பத்து கட்டளைகள்” பட்டியலை அச்சிட்டார்:

1. சுதந்திர சமுதாயத்தில் வாழும் எவருக்கும் ஒரு ராணுவ படைப்பிரிவு போன்ற சீன கம்யூனிஸ்ட் சமூகத்தின் வாழ்க்கையைப் பற்றிய முழுமையான புரிதல் இல்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

2. சீன கண்ணாடிகள் மூலம் செஞ்சீனாவைப் பாருங்கள். அதற்கு மாறாக வெளி நாட்டு பார்வையில் நீங்கள் அதைப் பார்த்தால், சீன நிகழ்வுகளை உமது சொந்த பிரச்சனைகளின் அடிப்படையில் மட்டுமே புரிந்து கொள்வீர்கள்.

3. மற்ற கம்யூனிஸ்ட் நாடுகளைப் பற்றி ஏதாவது கற்றுக்கொள்ளுங்கள் (வியட்நாம், வட கொரியா ஆகிய கம்யூனிஸ்ட் நாடுகள் மட்டுமே எஞ்சியிருப்பதால் குறைவான பொருத்தம் மட்டுமே கிடைக்கலாம். இருந்தாலும் கடந்தகால வரலாறு ஓரளவு துணைபுரியும்).

4. மார்க்சியத்தின் அடிப்படைக் கொள்கைகளைப் படிக்கவும்.

5. மார்க்சிய சமுதாயத்தில் உபயோகிக்கப்படும் வார்த்தை பிரயோகம் மற்றும் சொற்கள் மற்ற இடங்களில் இருப்பதைப் போல அதே பொருளைக் கொண்டிருக்கவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

6. உங்கள் பொது அறிவை நினைவு கொள்ளுங்கள்: சீனர்கள் சீனர்களின் குறிப்பிட்ட குணாதிசயங்களைக் கொண்டிருக்கலாம், ஆனால் அவர்கள் மனிதர்கள், எனவே மனிதர்களின் இயல்பான எதிர்வினைகளை அவர்கள் கொண்டுள்ளனர்.

7. மக்கள், பிரச்சினைகளை விட முக்கியமானவர்கள் அல்ல் ஆனால் அவர்கள் ஒருவேளை அதிகமாக இருக்கலாம். ஆகவே அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக, பதவியில் இருக்கும் குழு, எதிர்ப்பவர்களின் திட்டத்தை ஏற்கலாம்.

8. உங்களுக்கு எல்லா பதில்களும் தெரியும் என்று நம்பாதீர்கள். சீனா பதில்களை வழங்குவதை விட அதிகமான கேள்விகளையே எழுப்புகிறது.

9. உங்கள் நகைச்சுவை உணர்வை இழக்காதீர்கள். சீனாவின் படைமுறை அழுத்தம் மிகவும் தீவிரமானது, ஆகவே அதை மிகவும் தீவிரமாக நீங்கள் எடுத்துக் கொள்ள முடியாது.

10. எல்லாவற்றிற்கும் மேலாக, சிறிய அச்சைப் படியுங்கள்.

மேலும் சீன ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை கவனமாக படித்து சொல்லாட்சிக்கும், யதார்த்தத்திற்கும் இடையே உள்ள இடைவெளியை நாம் புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக உணர்ச்சிகரமான விஷயங்களில். அதிபர் ஷீ-ன் வார்த்தைகளில், பத்திரிகைகளுக்கு “பார்ட்டி” என்ற குடும்பப் பெயர் உண்டு.

கொள்கைகளின் துணிச்சலான அறிவிப்புகள் செயலில் விளையாமல் போகலாம் அல்லது ஆங்கில தினசரியான பீப்பிள்ஸ் டெய்லி யில் தோன்றாமல் போகலாம். ஆகவே, ஒரு முக்கிய பேச்சு அல்லது அறிக்கையை கடந்த காலங்களில் இது போன்ற நிகழ்வுகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது எப்போதுமே புத்திசாலித்தனமான செயலாகும்.

சீன யோசனை அல்லது அவர்கள் உபயோகிக்கும் சூசகமான மொழி உண்மையில் புதியுதா? அப்படி இருக்கலாம், ஆனால் அதே வார்த்தைகள் கடந்த ஆண்டு தேசிய மக்கள் பேரவை (NPC எனப்படும் சீன பாராளுமன்றம்) அறிக்கையில் அல்லது ஒரு தசாப்தத்திற்கு முந்தைய அதிபர் ஹூ ஜின்டாவின் உரைகளில் ஒன்றிலோ தோன்றி இருக்கக்கூடும். கடந்த காலங்களில் உள்ளடக்கப்பட்ட தலைப்புகளில் வேறுபாடுகள் இருந்தால், அவை எதைக் குறிக்கும் என்பதைக் கவனியுங்கள். ஒரு ‘புதிய சகாப்தம்” அல்லது ‘புதிய வளர்ச்சி மாதிரி” பற்றி ஷீ பேசும் அனைத்திற்கும், கடந்த காலத்துடன் கணிசமான ஒற்றுமை உள்ளது.

ஒரு பேச்சு அல்லது அறிக்கையில், “சில சிக்கல்கள் உள்ளன” பகுதியைப் பாருங்கள்: இது பொதுவாக “நாங்கள் நன்றாகச் செய்யவில்லை” என்ற பகுதியை விட அதிகமாக வெளிப் படுத்துகிறது. கட்சி அரசியல் மற்றும் சீன மொழி இரண்டுமே, கட்சி முழக்கங்களுக்கும் வாசகங்களுக்கும் தங்கள் தனித்தன்மையை அளிக்கின்றன.

வாக்கியவியல் அல்லது வாசகம் முக்கியத்துவம் வாய்ந்தது. கோஷங்கள் என்பது சித்தாந்தம், கொள்கை அல்லது பிரச்சாரத்தின் சுருக்கம். எடுத்துக்காட்டாக, நவம்பர் 2021 இன் ஆறாவது பிளீனத்திலிருந்து, “இரண்டு நிறுவனங்கள்” என்ற வார்த்தைகள் அடிக்கடி குறிப்பிடப்படுகின்றன.

ஷீ-யை கட்சியின் மையமாகவும், “புதிய சகாப்தத்திற்கு ஷீ யின் சிந்தனை” யை சித்தாந்தம் மற்றும் வழிகாட்டுதலின் மையமாகவும் நிறுவுவது, ஷீயின் ஆளுமை அதிகாரத்தை கட்டமைக்கும் செயல்முறையின் ஒரு பகுதியாகும். இது இந்த ஆண்டு கட்சி காங்கிரஸில் உறுதிப்படுத்தப் படுத்தப்பட்டது.

சில வார்த்தை பிரயோகங்கள் அல்லது கட்சியின் அவசியமான பிரமுகர் பெயர்கள் இல்லாமல் இருந்தால் அதற்கு முக்கிய காரணங்கள் இருக்கலாம். அவை ஒரு வேளை சித்தாந்த அடிப்படை மாற்றம் அல்லது அந்த பிரமுகர் அரசியல் சிக்கலில் சிக்கியிருக்கலாம் என்ற ஊகம் மிகைப்படுத்தப்பட்டதா என்பதை கூர்ந்து கவனிக்க வேண்டும்.

அடிப்படைகளைப் புரிந்துள்ள சீனாவின் மிகவும் மாறுபட்ட அரசியல் சித்தாந்த அடிப்படயின் அரசியல் அமைப்பை புரிந்து கொள்வது அவசியம்.

குறிப்பாக புரிந்து கொள்ள வேண்டியவை:

● ‘ஆலோசனை லெனினிச அரசு’ (Consultative Leninist State) என்றால் என்ன? லெனினிஸ்ட் சித்தாந்தத்தில், அரசாங்கம் மற்றும் பிற அமைப்புகளுடனான கட்சியின் உறவைப் புரிந்துகொள்வது முக்கியம். உதாரணமாக, ஷீயின் வார்த்தைகளில் ‘கட்சி எல்லாவற்றையும் வழிநடத்துகிறது’. என்று சொன்னால், அதைப் புரிந்து கொள்ள ஐக்கிய முன்னணி மற்றும் சீன மக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டு அமைப்பு பற்றிய புரிதல் தேவை.

● கட்சி மற்றும் அரசாங்கத்தின் ஐந்து நிலைகள் (மாகாண, நகரம்-மாநிலம், மாவட்டம், நகரம் மற்றும் கிராமம்) மற்றும் அவற்றின் அதிகாரங்கள் என்ன என்ற புரிதல் தேவை.

● கட்சி ஷீயின் கீழ் எவ்வாறு செயல்படுகிறது மற்றும் கட்சி உறுப்பினர் ஆக செயல்படுவது எவ்வாறு என்று தெரிந்து கொள்வது அவசியம்.

சீன கம்யூனிஸ்ட் கட்சி நாட்டின் ஆட்சியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்ற அடிப்படையில் எப்போதும் செயல்படுகிறது. அதை நியாயப்படுத்த ஆறு காரணங்களை காட்டுகிறது:

1. மக்களின் வளர்ந்து வரும் செல்வம்
2. உலக மையத்தில் சீனவுக்கான விசேஷ அந்தஸ்து
3. நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு
4. சீன கலாசாரத்துக்கு மரியாதை
5. மிகச்சிறந்த ஆட்சி முறை
6. அதிகரித்து வரும் சமத்துவமின்மை மற்றும் மாறிவரும் இயற்கை சூழ்நிலையின் பாதிப்பு ஆகியவை அடங்கும்.

மேற்கண்ட ஆறு காரணிகளின் அடிப்படையில் சீனாவின் வெளியுறவுக் கொள்கை இயங்குகிறது. சீன வெளி உறவு எப்போதும் உள்நாட்டில் அது எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற அடிப்படையில் இயங்கினாலும், அதன் அடிப்படை கருத்து வெளி உலகின் நிகழ்வுகள் எவ்வாறு கம்யூனிஸ்ட் அரசின் அங்கீகாரத்தை மக்களிடையே பாதிக்கும் என்பதேயாகும். இதை புரிந்து கொள்ள சீனாவின் சரித்திரமும் அதில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சியைப் பற்றிய ஞானமும் அவசியம்.

இதை படித்த பின்பு, மற்ற சீன விமர்சகர்களை முழுமையாக ஏற்றுக் கொள்ளாமல், உங்களுடைய பார்வையில் ஏதாவது மாற்று கருத்துக்கள் தோன்றினால் அவற்றை புறக்கணிக்காதீர்கள்.

(இக்கட்டுரை பல்வேறு பதிவுகளில் இருந்து தொகுக்கப்பட்டது.)

(கேர்னல் ஆர் ஹரிஹரன் ஓய்வு பெற்ற ராணுவ நுண்ணறிவு துறை அதிகாரியாவார். அவர் அத்துறையின் தெற்காசிய நிபுணர் ஆவார்.) ●



# ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக காணியை மக்களுக்கு வழங்குக!

## திகாம்பரம் எம். பி. வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 11

தோட்ட தொழிலாளர்களின் பொருளாதார பிரச்னையை தீர்க்காமல் எதனையும் செய்ய முடியாது. அதனால் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் மக்களுக்குரிய காணிகளை பிரித்து வழங்குமாறு ஜனாதிபதியை கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலமாவது அவருக்கு தோட்ட மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ள முடியும் என ப.திகாம்பரம் எம்.பி. தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு பொருளாதார பிரச்னையை தவிர வேறு எந்த பிரச்சினையும் இல்லை. 20 கிலோ தேயிலை கொழுந்து பறித்தால் அவர்களுக்கு 800 அல்லது 900 ரூபாய் கிடைக்கிறது. 20 கிலோவுக்கு குறைவாக பறித்தால் கிலோவுக்கு 50 ரூபா கிடைப்பதில்லை. அதனால் தோட்ட தொழிலாளர்களின் பொருளாதார பிரச்னையை தீர்க்காமல் எதனையும் செய்ய முடியாது.

அதனால், ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் மக்களுக்குரிய காணிகளை பிரித்து வழங்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன். காணி உரிமையை கொடுக்குமாறு நாங்கள் தெரிவிப்பதில்லை. ஏனெனில் 10 பேர்ச் காணியை வழங்காமல் இருக்கும் இவர்கள் ஓர் ஏக்கர் காணி வழங்கி அதற்கு உரிமை வழங்கப்போவதில்லை.

அதனால் தொழிலாளர்களுக்கு குத்தகைக்கு காணியை வழங்கி, அதில் அவர்கள் தேயிலை பயிர் செய்த பின்னர், அவர்களிடமிருந்து ஒரு கிலோ தேயிலை கொழுந்து 150 ரூபாய்க்கு பெற்றுக் கொள்ள வேண்டும். இதன் மூலம் 20 கிலோ தேயிலை பெற்றுக்கொண்டால், அவர்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது. தேயிலை கொழுந்து அதிகம் இருக்கும் காலத்தில் அதிகமாக பணம் சம்பாதித்துக் கொள்ளமுடியுமாகிறது. இதன் மூலம் அவர்களின் தேவைகளை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள்.

அவ்வாறு இல்லாமல் நாங்கள் பாராளுமன்றத்தில் இதனை கதைக்கிறோம். அதனை பத்திரிகை, தொலைக் காட்சியில் காட்டுவார்கள். அத்துடன் அது முடிவடைகிறது. அதனால் இதனை செய்ய முடியாது என்றால் எதிர்காலத்தில் தோட்டங்களில் வேலை செய்ய யாரும் இருக்கமாட்டார்கள். முன்னர் 300, 400 பேர் வேலை செய்த தோட்டங்களில் தற்போது 60, 70 பேரே வேலை செய்கிறார்கள். தோட்ட மக்கள் கொழும்புக்கு வேலைக்கு வந்து நாள் ஒன்றுக்கு 2000, 3000 என சம்பாதித்து வருகின்றனர்.

எனவே பெருந்தோட்டத்துறையை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்றால் எமது கோரிக்கையை முன்னெடுக்க முன்வர வேண்டும். இல்லாவிட் டால், அதனை செய்ய முடியாமல் போகும். நல்லாட்சி அரசாங்கத்தில் ஒரு லயன் அறைக்கு 7 பேர்ச் காணி வழங்க தீர்மானித்தோம். அதனை தற்போது 10 பேர்ச் வழங்குவதாக தெரிவித்திருக்கின்றனர்.

அவ்வாறு இல்லாமல் அனைவருக்கும் காணி வழங்க தீர்மானித்தால் பெருந்தோட்டத்துறை இல்லாமல் போகும். அதனால் ஒரு லயன் அறைக்கு 10 பேர்ச் காணி வழங்கி, அவர்களுக்கு பிள்ளைகள் இருந்தால் அந்த காணியில் மாடி வீடு அமைத்துக்கொள்ள முடியும்.

அத்துடன், தோட்ட தொழிலாளர்களுக்கு 1700 ரூபாய் வழங்க முடியுமா என எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்குமாறு ஜனாதிபதி முதலாளிமார்களிடம் கேட்டுக்கொண்டுள்ளதாக பத்திரிகைகளில் செய்தி வெளியிடப் பட்டிருக்கிறது. இது தொடர்பாக நான் முதலாளிமார் சங்கத்திடம் கேட்டேன். ஆனால், அவ்வாறு எந்த கலந்துரையாடலும் மேற்கொள்ளவில்லை என தெரிவித்தார்கள். மாறாக, மறுசீரமைப்பு செய்யுமாறே தெரிவித்ததாக குறிப்பிட்டார்கள். அதனால் ஜனாதிபதியையும் எங்களுக்கு தெரியும் கம்பனி உரிமையாளர்களையும் எங்களுக்கு தெரியும். இது ஒருபோதும் இடம்பெறாத விடயம். கூட்டு ஒப்பந்தத்துக்கு சென்றாலும் 1700 ரூபாய்க்கு அவர்கள் இணங்கப்போவதில்லை.

அதனால் தோட்டத் தொழிலாளர்களுக்கு காணிகளை குத்தகைக்கு வழங்கி தேயிலை பயிரிடச் செய்து அவர்களிடம் தேயிலையை 150 ரூபாய்க்கு பெற்றுக் கொள்வதே இந்த பிரச்னைக்கு தீர்வு.' - என்றார். (ஐ)

# தேசிய உரையாடல் ஒன்றின் ஆரம்பம்:

(14ம் பக்கத் தொடர்ச்சி)

புலம்பெயர் சமூகங்கள் வசிக்கும் நாடுகளின் அரசாங்கங்கள் மற்றும் இந்தியாவுடனும் நாங்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம். பன்முகத்தன்மை கொண்டாடப்பட்டு அது பலமாகப் பார்க்கப்படும் இந்நாடுகளில் வாழ்ந்த வாழ்க்கை அனுபவமும், தொழில் மற்றும் தனிப்பட்ட அனுபவங்களும், புலம்பெயர் நாடுகளில் உள்ள பலருக்கு இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார முன்னேற்றங்களுக்குப் பங்களிப்பதை சாத்தியமாக்குகின்றன. எமது கூட்டு இலட்சியத்தை அங்கீகரித்து, இந்த தேசிய உரையாடலை ஆரம்பிப்பதற்கு வணக்கத்திற்குரிய மகாநாயக்கர்கள் உட்பட அனைத்து முக்கிய மதங்களின் மூத்த தலைவர்கள் மற்றும் பீடாதிபதிகள், ஜனாதிபதி மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், மற்றும் இலங்கையின் அனைத்து மக்களினங்களுக்கும் பல்சமய புரிந்துணர்வு, ஒற்றுமை, சமாதானம், நல்லிணக்கம், சமத்துவம், செழிப்பு ஆகியவற்றை மேம்படுத்த உழைக்கும் சிவில் சமூக அமைப்புகளின் ஆசீர்வாதங்கள் கிடைத்ததையிட்டு நாம் உண்மையிலேயே உத்வேகமடைந்துள்ளோம்.

இன்று நாம் தொடங்கும் பயணம் நீண்ட மற்றும் கடினமானதாக இருக்கும், ஆனால் அது பொறுப்பு வாய்ந்த நிர்வாக நிறுவனங்களை உருவாக்குவதற்கும், நீண்டகால இனக் குறைகள் மற்றும் பொருளாதாரச் சீர்கேடுகளைத் தீர்ப்பதற்கு உகந்த சூழல் ஏற்படுவதற்கும் உதவும். இத் தேசிய உரையாடலின் மூலம் பெறும் வெற்றியானது சாதாரண குடிமக்களுக்கு நேரடிப் பொருளாதார, அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தர நன்மைகளுடன் இலங்கையை அளப்பெரிய வகையில் மாற்றும் ஆற்றல் கொண்டுள்ள அதே வேளையில், சர்வதேச சமூகத்தில் ஒரு முற்போக்கான மரியாதைக்குரிய நாடாக அதன் பெயரை மீட்டெடுக்கும்.

நாகர்கோட் உரையாடல் இந்த வாரம் இலங்கையில் தொடர்கிறது. 'இமயமலைப் பிரகடனம்' இப்போது பொது ஆவணமாக உள்ளது. இவ் வாரம் நாம் ஆரம்பித்துள்ள தேசிய உரையாடலை, ஒவ்வொரு இலங்கைக் குடிமகனும் கௌரவத்துடனும், நம்பிக்கையுடனும், அச்சமோ சந்தேகமோ இன்றி சம உரிமைகளை அனுபவித்து நிம்மதியாக வாழ வைக்கவல்ல தேசிய இயக்கமாக மாற்றுவது, இலங்கை மக்களாகிய எம் எல்லோரிலும் தங்கியுள்ளது.





